# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

## மானியக் கோரிக்கை எண். 18


# ஆர். எஸ். ராஜகண்ணப்பன்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023-2024

## பொருளடக்கம்


| வ. எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1-70 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் | 71-125 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 126-174 |
| 4 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 175-186 |

## பட்டுவளர்ச்சித் துறை
## அட்டவணை

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 2 | இந்தியாவில் பட்டுத் தொழில் | 3 |
| 3 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் | 5 |
| 4 | பட்டுவளர்ச்சித் துறை | 12 |
| 5 | 2022–2023–ஆம் ஆண்டு துறையால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் | 18 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் | 30 |
| 7 | பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு | 66 |
| 8 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 67 |
| 9 | துறையின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு மென்பொருள் உருவாக்குதல் | 69 |
| 10 | 2023–2024–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 70 |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 71 |
| 2 | நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் | 72 |
| 3 | நிர்வாக அமைப்பு | 74 |
| 4 | நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) | 76 |
| 5 | சந்தைப்படுத்துவதற்கான செயல்பாடுகள் | 79 |
| 6 | பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் | 88 |
| 7 | தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள் | 90 |
| 8 | கைவினைஞர்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் | 97 |
| 9 | கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு | 117 |
| 10 | மாமல்லபுரம் – ஓர் உலக கற்சிற்ப நகரம் | 119 |
| 11 | 2022 – 2023–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளின் முன்னேற்றம் | 119 |
| 12 | நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வை | 125 |

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
## அட்டவணை


| வ. எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 126 |
| 1. | நோக்கங்கள் | 127 |
| 2. | நிருவாகம் | 128 |
| 3. | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 129 |
| 4. | கதர் | 131 |
| 5. | மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் | 145 |
| 6. | வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA) | 147 |
| 7. | கிராமத் தொழில்கள் | 149 |
| 8. | தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 154 |
| 9. | காலணி தொழில் | 156 |
| 10 | தேனீ வளர்ப்புத் தொழில் | 158 |
| 11 | கைமுறைக் காகிதத் தொழில் | 160 |
| 12 | இதர கிராமத் தொழில்கள் | 161 |
| 13 | வணிகம் | 162 |
| 14 | தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 168 |
| 15 | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) | 169 |
| 16. | கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 171 |
| 17. | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 173 |

## தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்
## அட்டவணை


| வ. எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 175 |
| 1. | நோக்கங்கள் | 175 |
| 2. | நிருவாகம் | 176 |
| 3. | பதநீர் இறக்குவதற்கான உரிமம் | 177 |
| 4. | பதநீர் (நீரா) | 177 |
| 5. | பொது விநியோகக் கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை | 178 |
| 6. | பனை ஓலைப் பொருட்கள் | 179 |
| 7. | சந்தைப்படுத்துதல் | 180 |
| 8. | பொது வசதி மையம் | 182 |
| 9. | கட்டடம் கட்டுதல் மற்றும் புனரமைத்தல் | 184 |
| 10. | பனை வெல்லம் தயாரிப்புக்கான பயிற்சி | 184 |
| 11. | பனை விதைகள் விநியோகம் | 185 |
| 12 | பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 186 |

# பட்டுவளர்ச்சித் துறை

## 1. அறிமுகம்

இயற்கையின் கருவூலம் எண்ணற்ற அதிசயங்களை கொண்டது. அந்த எண்ணற்ற அதிசயங்களில், பட்டுப்புழுவிலிருந்து வெளிவரும் பட்டு நூலால் நெய்யப்படும் பளபளப்பான தூய்மையான பிரகாசம் கொண்ட ஆடையும் ஒன்றாகும். மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான தேடலில், பட்டு விவசாயம் அல்லது பட்டுவளர்ப்பு ஒரு முக்கிய கண்டுபிடிப்பாகும்.

பட்டுவளர்ப்பு என்பது மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் தொழிலக பட்டு உற்பத்தி ஆகிய செயல்பாடுகளை உள்ளடக்கிய வேளாண் தொழில். வேளாண்மையை அடிப்படையாக கொண்ட கிராமப்புற குடிசைத் தொழிலான பட்டுத் தொழிலானது, குறுகிய அறுவடைக் காலத்தைக் கொண்டிருப்பதால், ஆண்டு முழுவதும் பட்டுப்புழுவளர்ப்பு மேற்கொள்வது சாத்தியமாகிறது. குறைந்த முதலீட்டில், அதிக இலாபம் தரும் தொழிலாக பட்டுத்தொழில் விளங்குகிறது. மேலும், இது கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள

பெண்கள் உட்பட சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. ஆகவே, பட்டுப்புழு வளர்ப்பு கிராமப்புற சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பிற்கு ஒரு நம்பத்தகுந்த ஆற்றல்மிகு தொழிலாக விளங்குகிறது.

கிராமப்புறத்தை அடிப்படையாகக் கொண்ட பண்ணை–சார் மற்றும் பண்ணை–சாரா செயல்பாடுகளினால் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்க இயலும் என்பதால், பட்டுத்தொழில் நாட்டின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான தொழில்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய வாழ்வாதாரங்களில் ஒரு மாற்றாக, பட்டுவளர்ப்பு அதன் தடத்தை வரலாறு முழுவதும் பதித்துள்ளது. கலாச்சார ரீதியாக வளமான நமது நாட்டில், ஆடம்பர விழாக்களில் மகத்துவம் மிக்க பட்டின் பங்கு பின்னிப்பிணைந்துள்ளது. ஆயிரக்கணக்கான பட்டு விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதுடன், ஏராளமான நெசவாளர்களுக்கு பழமைமிகு பட்டுத்தொழில் நடைமுறை ஒரு அடித்தளமாக செயல்படுகிறது.

## 2. இந்தியாவில் பட்டுத் தொழில்

இந்திய பட்டாடைகளின் மென்மை, கலைநயமிக்க வேலைப்பாடு, பிரத்யேக வண்ணங்கள் ஆகியவை பெயர்பெற்ற ஒன்றாகும். இன்றைய தேதியில் கச்சாப்பட்டு உற்பத்தியில் இந்தியா உலகளவில் இரண்டாமிடத்தை பெற்றுள்ளதுடன் அதிகளவில் பட்டினை பயன்படுத்தும் நாடு எனும் சிறப்பையும் பெற்றுள்ளது.


உலகளவில் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா எனப்படும் நான்கு வகையான பட்டுகளையும் உற்பத்தி செய்யும் ஒரே நாடாக இந்தியா திகழ்கிறது. அசாமைச் சுற்றியுள்ள வடகிழக்கு மாநிலங்களில் இருந்து 'மூகா பட்டு' எனப்படும் விலையுயர்ந்த, பளபளப்பான தங்க-மஞ்சள் நிற பட்டுநூலினை உற்பத்தி செய்யும் உலகின் ஒரே நாடு இந்தியாவே ஆகும்.

மத்திய பட்டு வாரிய அறிக்கைப்படி, 2022-2023-ஆம் ஆண்டில் (டிசம்பர் 2022 வரை) 27,744 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**இந்தியாவின் கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)**
**(டிசம்பர் 2022 வரை)**

| வ. எண் | பட்டின் வகை | கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| 1. | மல்பெரி | 20118 |
| 2. | ஈரி | 6329 |
| 3. | டசார் | 1070 |
| 4. | மூகா | 227 |
| **மொத்தம்** | | **27744** |

மொத்த பட்டு உற்பத்தியில் 73 சதவீதம் அளவிற்கு மல்பெரி பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது.




**மல்பெரி கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)**
**(பிப்ரவரி 2023 வரை)**

இந்தியாவின் கச்சாப்பட்டுத் தேவை ஆண்டொன்றிற்கு 40,000 மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக உள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், கடந்த ஆண்டில் (டிசம்பர் 2022 வரை) 27,744 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தேவையினை பூர்த்தி செய்ய பிற நாடுகளிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது.

ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையில், 1,378.32 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டு மற்றும் பட்டு ஜவுளிகளை பிற நாடுகளுக்கு இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

நாட்டில் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்டுநூல் தேவையைப் பூர்த்தி செய்து, பட்டுநூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு ஜவுளித்துறை அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசின் பட்டுவளர்ச்சித் துறை ஆகியன பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

## 3. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்

பட்டுத்தொழிலில் பாரம்பரியம் மிக்க மாநிலமாக அறியப்படும் தமிழ்நாடு, பட்டு உற்பத்தியில் நெடும்

வரலாற்றைக் கொண்டிருப்பதோடு, பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் பட்டுத் தொழிலுக்கு முக்கிய பங்களிப்பாளராக திகழ்ந்து வருகிறது.

காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு மற்றும் சேலம் வெண்பட்டு வேட்டிகள் போன்ற உலகப் புகழ் பெற்ற பட்டுத் துணிகளின் தாயகமாக, தனித்துவமான பாரம்பரியத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது. தனித்துவத் தன்மையுடன் விளங்கும் இப்பட்டுத் துணிகள் புவிசார்க் குறியீடுகளைப் பெற்றுள்ளன.

இந்தியாவில் பட்டு உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, பட்டுப்புழுவளர்ப்புக்கு மிகவும் சாதகமான வேளாண்–பருவநிலையைக் கொண்டுள்ளது.

மாநிலத்தில் தரமான வெண்பட்டு உற்பத்தியை அதிகரித்திட தமிழ்நாடு அரசு அளித்து வரும் தொடர்ச்சியான ஊக்கத்தின் காரணமாக, மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதில் தமிழ்நாடு பட்டு விவசாயிகள் முன்னணியில் உள்ளனர்.


கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், தென்காசி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டுவளர்ப்புத் தொழில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் பட்டுவளர்ப்புத் தொழில் மிதமான அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022-2023-ஆம் ஆண்டில், 3200 விவசாயிகளால், 6,314 ஏக்கர் பரப்பில் மல்பெரி புதிதாக நடவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 01.04.2023 தேதியில், 56,013.74 ஏக்கர் பரப்பளவில் 28,283 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுப்புழுவளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

**மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு**

| வ. எண் | மாவட்டம் | 01.04.2023-இல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானா வாரி | மொத்தம் | |
| 1 | கிருஷ்ணகிரி | 8241.25 | | 8241.25 | 4133 |
| 2 | தருமபுரி | 4864.05 | | 4864.05 | 2992 |
| 3 | சேலம் | 4121.69 | | 4121.69 | 2537 |
| 4 | ஈரோடு | 4077.71 | | 4077.71 | 1794 |
| 5 | கோயம்புத்தூர் | 3356.75 | | 3356.75 | 1524 |
| 6 | திருப்பூர் | 7047.64 | | 7047.64 | 3347 |
| 7 | நீலகிரி | 92.00 | | 92.00 | 63 |
| 8 | வேலூர் | 824.25 | | 824.25 | 356 |

| வ. எண் | மாவட்டம் | 01.04.2023–இல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானா வாரி | மொத்தம் | |
| 9 | திருப்பத்தூர் | 1958.25 | 170.85 | 2129.10 | 1249 |
| 10 | இராணிப்பேட்டை | 655.35 | | 655.35 | 323 |
| 11 | காஞ்சிபுரம் | 22.40 | | 22.40 | 18 |
| 12 | செங்கல்பட்டு | 46.00 | | 46.00 | 19 |
| 13 | திருவள்ளூர் | 33.00 | | 33.00 | 19 |
| 14 | திருவண்ணாமலை | 1388.55 | 128.00 | 1516.55 | 812 |
| 15 | நாமக்கல் | 2877.00 | 66.65 | 2943.65 | 1558 |
| 16 | கரூர் | 472.50 | | 472.50 | 262 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 1133.05 | | 1133.05 | 590 |
| 18 | பெரம்பலூர் | 256.90 | | 256.90 | 125 |
| 19 | அரியலூர் | 185.00 | | 185.00 | 91 |
| 20 | புதுக்கோட்டை | 595.50 | | 595.50 | 314 |
| 21 | திருவாரூர் | 208.25 | | 208.25 | 93 |
| 22 | தஞ்சாவூர் | 414.60 | | 414.60 | 201 |
| 23 | நாகப்பட்டினம் | 20.50 | | 20.50 | 13 |
| 24 | மயிலாடுதுறை | 50.00 | | 50.00 | 19 |
| 25 | விழுப்புரம் | 847.50 | | 847.50 | 439 |
| 26 | கள்ளக்குறிச்சி | 491.00 | | 491.00 | 278 |
| 27 | கடலூர் | 640.25 | | 640.25 | 303 |
| 28 | மதுரை | 678.00 | | 678.00 | 299 |
| 29 | தேனி | 2419.50 | | 2419.50 | 1184 |
| 30 | விருதுநகர் | 648.00 | | 648.00 | 259 |
| 31 | இராமநாதபுரம் | 182.50 | | 182.50 | 90 |
| 32 | சிவகங்கை | 450.20 | | 450.20 | 203 |
| 33 | திண்டுக்கல் | 3632.50 | | 3632.50 | 1572 |
| 34 | திருநெல்வேலி | 252.30 | | 252.30 | 118 |
| 35 | தென்காசி | 1881.25 | | 1881.25 | 813 |
| 36 | தூத்துக்குடி | 278.85 | | 278.85 | 116 |
| 37 | கன்னியாகுமரி | 304.20 | | 304.20 | 157 |
| | மொத்தம் | 55648.24 | 365.50 | 56013.74 | 28283 |




**கடந்த மூன்று ஆண்டுகளில் மல்பெரி விரிவாக்கம்**

2023–2024–ஆம் ஆண்டில் கூடுதலாக 6,500 ஏக்கரில் தொகுப்பு முறையில் மல்பெரி நடவு செய்யவும் 625 ஏக்கரில் மர மல்பெரி நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# மல்பெரி இரகங்கள்



எம்5 / கன்வா–2 (1950)
மானாவரி
14000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



எம்ஆர்2 (1970)
இறவை
14000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



எஸ்–36 (1986)
இறவை
16000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



வி1 (1997)
இறவை
24000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



ஜி4 (2003)
இறவை
24000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்



ஜி 2 (2004)
இறவை (இளம் பட்டுப்புழு)
15000 கிலோ இலைகள்
ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில்

தரமான பட்டுக்கு பெயர்பெற்ற தமிழ்நாடு, 2022–2023–ஆம் நிதி ஆண்டில் 2,589 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் வெண்பட்டுக்கு மாற்றாக, தமிழ்நாடு 2,525 மெட்ரிக் டன் வெண்பட்டினை உற்பத்தி செய்து, மல்பெரி வெண்பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தேசிய அளவில் இரண்டாம் இடம் வகிக்கிறது.

கச்சாப்பட்டு உற்பத்தி மட்டுமல்லாது, நெசவு, சாயமிடுதல் மற்றும் எம்பிராய்டரி போன்ற பல்வேறு செயல்பாடுகளை செவ்வனே உள்ளடக்கிய தொடர்நிலை தொழில்களையும் தமிழ்நாடு கொண்டுள்ளது. காஞ்சிபுரம் புடவை போன்ற தமிழ்நாட்டின் பட்டுப் புடவைகள், அவற்றின் தரம் மற்றும் கைவினைத் திறனுக்காக பெரிதும் அறியப்படுகின்றன, மேலும் அவற்றின் தேவை, இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் அதிகளவில் உள்ளது.

ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டில் முக்கியமான தொழிலாக விளங்கும் பட்டுவளர்ப்பு, ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை அளிப்பதோடு, நெசவு மற்றும்

சாயமிடுதல் போன்ற தொடர்நிலை செயல்பாடுகளின் வளர்ச்சியையும் ஆதரிக்கிறது. அரசின் தொடர் ஆதரவு மற்றும் முதலீட்டுடன், பட்டுத்தொழில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

4. **பட்டுவளர்ச்சித் துறை**

தமிழ்நாட்டில், பட்டுத்தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு தொழில்முனைவோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த 'பட்டுவளர்ச்சிப் பிரிவு', 1979–ஆம் ஆண்டு முதல் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி இயக்குநரகமாக செயல்படும் வகையில் மேம்படுத்தப்பட்டு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களது சீரிய வழிகாட்டுதலின்படி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகளையும், நிதி உதவிகளையும் பயனாளிகளுக்கு கொண்டு சேர்ப்பதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

### 4.1. பட்டுவளர்ச்சித் துறையின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டை வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக உருவாக்குதல்

- மல்பெரி சாகுபடி செய்யப்படும் பரப்பினை அதிகரித்தல்

- கூடுதலான விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களை பட்டுத்தொழிலில் ஈடுபடச் செய்து அதன்மூலம் அவர்களது பொருளாதார வளர்ச்சியை உயர்த்துதல்

- சிறந்த சமூகப்–பொருளாதார நிலையை அடைவதற்கு வேலையில்லா இளைஞர்களை பட்டுப்புழு வளர்ப்பு / பட்டுநூற்பு தொழிலில் ஈடுபட ஊக்குவித்து உதவுவதன் மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்காக பின்வரும் செயல்பாடுகளை பட்டுவளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது:

- ❖ தரமான பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்க உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல்.
- ❖ மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் உற்பத்தி செலவினங்களைக் குறைத்து தரமான பட்டுக்கூடுகள் மற்றும் கச்சாப் பட்டுநூலின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பங்குதாரர்களை ஊக்குவித்தல்.
- ❖ மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டுநூற்பு போன்ற செயல்பாடுகளில் திறன் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்குதல்.
- ❖ மாநிலத்தில் பட்டுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

❖ தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்து வழங்குதல்.

❖ பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கான ஒழுங்கு முறை சந்தை வசதிகளை ஏற்படுத்துதல்.

❖ பட்டுக்கூட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய நிலைகளில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் மானிய உதவி வழங்குதல்.

❖ பல்வேறு முதன்மைத் திட்டங்களின் கீழ் திட்ட உதவிகள் வழங்கிட பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.


❖ பட்டு விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீடு வழங்குதல்.

❖ அதிக தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதன் மூலம் இறக்குமதி

செய்யப்படும் பட்டுக்கு நிகரான தரமான வெண்பட்டுநூல் உற்பத்தியினை அதிகரித்தல்.

- அதிக அளவில் பட்டு நூற்பு அலகுகள் மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவுவதன் மூலம் பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்துதல்.

# பட்டுவளர்ச்சி செயல்வழி வரைபடம்



## 5. 2022–2023–ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

மாநிலத்தின் பட்டுத் தொழில் வளர்ச்சிக்காகவும், பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்திலும், நிலையான பட்டுவளர்ச்சி நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையிலும், பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகளை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இவற்றுள் மல்பெரி நாற்றுகள், தோட்டம் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள், புழுவளர்ப்பு மனைகள் மற்றும் பட்டுநூல் உற்பத்தி அலகுகள் போன்ற பட்டுவளர்ப்பு சார்ந்த உட்கட்டமைப்புகளுக்கு மானிய உதவிகள் வழங்குதல் ஆகியனவும் அடங்கும்.

பட்டுவளர்ச்சித் துறை இயக்ககம் தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது:

### 5.1. மாநிலத் திட்டம்

பட்டு விவசாயிகளுக்கு ஆதரவளித்து மாநிலத்தில் பட்டுத் தொழிலின் வளர்ச்சியை மேம்படுத்திடவும், பட்டு விவசாயிகளின் நலனை

உறுதி செய்திடவும், மாநில அரசு பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டங்களை செயல்படுத்திட 2022–2023–ஆம் ஆண்டு மாநிலத் திட்டத்தின் கீழ் ரூ.1,813.55 இலட்சம் நிதி பின்வருமாறு ஒப்பளிப்பு செய்துள்ளது.

மாநிலத் திட்டம் 2022–2023

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (ஏக்கர்/ எண்ணிக்கை) | அலகு மதிப்பீடு (ரூபாய்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு | மொத்த தொகை |
| 1 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 5000 | 14000.00 | 525.00 | 175.00 | 700.00 |
| 2 | தனி பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் | 500 | 400000.00 | 600.00 | 1400.00 | 2000.00 |
| 3 | நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து பட்டு விவசாயிகளுக்கு வழங்குதல் | 1000 | 70000.00 | 525.00 | 175.00 | 700.00 |
| 4 | முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்குதல் | 300 | 35000.00 | 105.00 | – | 105.00 |
| 5 | எட்டு அரசு அலகுகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல். | 8 | | 29.60 | – | 29.60 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (ஏக்கர்/ எண்ணிக்கை) | அலகு மதிப்பீடு (ரூபாய்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு | மொத்த தொகை |
| 6 | மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 111 | – | 24.45 | _ | 24.45 |
| 7 | மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு பரிசு வழங்குதல் | 6 | – | 4.50 | _ | 4.50 |
| | | | மொத்தம் | 1813.55 | 1750.00 | 3563.55 |

## 5.1.1. பரிசுகளும் வெகுமதிகளும்

தரமான பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு நூலினை அதிக அளவில் உற்பத்தியை செய்ய பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், 2022–2023–ஆம் ஆண்டில், சிறந்த பட்டு விவசாயிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலும், சிறந்த பட்டுநூற்பாளர்களுக்கு மாநில அளவிலும் ரொக்கப்பரிசுகள் வழங்கிட ரூ.28.95 இலட்சம் நிதியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மார்ச் 09, 2023 அன்று மாநில அளவில் சிறந்து

விளங்கிய மூன்று பட்டு விவசாயிகள், மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/- வழங்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.3.2023) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக மொத்தம் 6 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகைக்கான காசோலைகளை 9 விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் 36 மாவட்டங்களில் (சென்னை மற்றும் செங்கல்பட்டு தவிர) மாவட்ட அளவில் சிறந்து விளங்கிய, 106 பட்டு விவசாயிகளுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும்

மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.25,000/-ரூ.20,000/- மற்றும் ரூ.15,000/- வழங்கப்பட்டது.

## 5.2. மத்திய பகுதித் திட்டம், 'சில்க் சமக்ரா-2'

பட்டுத்தொழில் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டமான "சில்க் சமக்ரா-2" திட்டம், நாட்டில் பட்டுவளர்ச்சி நடவடிக்கைகளை நிலைப்படுத்துவதையும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம், பின்வரும் இலக்குகளை அடைவதன் மூலம் இந்தியாவில் பட்டுத்தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உயர்த்திடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

❖ பட்டுநூல் உற்பத்தி மற்றும் தரத்தை அதிகரித்தல்

❖ பட்டு உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்பாட்டை ஊக்குவித்தல்

- ❖ பட்டு விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு நிதி உதவி அளித்தல்

- ❖ பட்டு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

- ❖ பட்டுத் தயாரிப்புகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

2022–2023–ஆம் ஆண்டில் மத்திய பகுதித் திட்டமான சில்க் சமக்ரா–2இன் கீழ் பல்வேறு திட்ட இனங்களை செயல்படுத்துவதற்காக மத்திய பட்டு வாரியத்தால் ரூ.3,335.463 இலட்சம் நிதி பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பிரிவு | நிதி ஒதுக்கீடு(ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு* | மொத்தம் |
| 1. | விதைப் பிரிவு | 183.000 | 91.500 | 274.500 |
| 2. | பட்டுக்கூட்டிற்கு முந்தைய நிலை | | | |
| அ. | பொது | 2794.642 | 1325.250 | 4119.892 |
| ஆ. | தாழ்த்தப்பட்டோருக்கான துணைத் திட்டம் | 122.129 | 44.750 | 166.879 |
| இ. | பழங்குடியினருக்கான துணைத் திட்டம் | 30.032 | 11.000 | 41.032 |
| துணைக்கூடுதல் (2) | | 2946.803 | 1381.000 | 4327.803 |

| வ. எண் | பிரிவு | நிதி ஒதுக்கீடு(ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு* | மொத்தம் |
| 3.. | பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலை (பொது) | 205.660 | 145.860 | 351.520 |
| **மொத்தம்** | | **3335.463** | **1618.360** | **4953.823** |

✶ நிதி பெறப்படவுள்ளது

## சில்க் சமக்ரா–2 திட்டத்தின் உட்கூறுகள் & மானிய நிதி பங்கீடு

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| **அ** | **விதை** | | | | |
| 1. | **விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கான உதவி** | | 5.000 | 3.750 | – |
| | புழுவளர்ப்பு மனை அமைக்க உதவித் தொகை வழங்குதல் | எண்ணிக்கை | 3.500 | 2.625 | – |
| | புழுவளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல் | எண்ணிக்கை | 1.500 | 1.125 | – |
| 2. | பட்டுப்புழு விதை உற்பத்தி அலகு நிறுவிட உதவியளித்தல் (தனியார்) | எண்ணிக்கை | 216.00 | 162.00 | – |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| ஆ | பட்டுக்கூட்டிற்கு முந்தைய நிலை | | | | |
| 1. | கிசான் மல்பெரி நாற்றாங்கால் அமைக்க உதவியளித்தல் | ஏக்கர் | 1.500 | 1.125 | 1.350 |
| 2. | 250 முட்டைத் தொகுதிகள் புழுவளர்ப்பு மேற்கொள்ள உதவிகள் வழங்குதல் (2.00 ஏக்கர் மல்பெரி நடவு) | | 6.500 | 4.875 | 5.850 |
| | மல்பெரி நடவு செய்ய ஊக்கத்தொகை வழங்குதல் | ஏக்கர் | 1.200 | 0.900 | 1.080 |
| | தரமான பட்டுக்கூடு உற்பத்தி செய்திட பட்டுப்புழுவளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் | எண் ணிக்கை | 4.500 | 3.375 | 4.050 |
| | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் வழங்குதல் | எண் ணிக்கை | 0.750 | 0.563 | 0.675 |
| | புழுவளர்ப்பு கிருமிநாசினிகள் / இடுபொருட்கள் வழங்குதல் | எண் ணிக்கை | 0.050 | 0.038 | 0.045 |
| 3. | 150 முட்டைத் தொகுதிகள் புழுவளர்ப்பு மேற்கொள்ள உதவிகள் வழங்குதல் (1.00 ஏக்கர் மல்பெரி நடவு) | | 4.400 | 3.300 | 3.960 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| | மல்பெரி நடவு செய்ய ஊக்கத்தொகை வழங்குதல் | ஏக்கர் | 0.600 | 0.450 | 0.540 |
| | தரமான பட்டுக்கூடு உற்பத்தி செய்திட பட்டுப்புழுவளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் | எண்ணிக்கை | 3.250 | 2.438 | 2.925 |
| | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் வழங்குதல் | எண்ணிக்கை | 0.500 | 0.375 | 0.450 |
| | புழுவளர்ப்பு கிருமிநாசினிகள் / இடுபொருட்கள் வழங்குதல் | எண்ணிக்கை | 0.050 | 0.038 | 0.045 |
| 4. | இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல் | எண்ணிக்கை | 13.000 | 9.750 | 11.700 |
| இ | பயிற்சி மற்றும் சேவைகள் (100% மத்திய பட்டு வாரியம்) | | | | |
| 1. | பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் | எண்ணிக்கை | 0.070 | 0.070 | 0.070 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | அலகு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மானிய உதவி (மத்திய பட்டு வாரியம் : மாநில அரசு) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது (50:25) | எஸ்சி / எஸ்டி (65:25) |
| ஈ | பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலை | | | | |
| 1. | தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் – 2000 முனைகள் (30:20) | எண் ணிக்கை | 598.000 | 299.00 | – |

## 5.3. இராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா (RKVY) (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்)– மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்) என்ற மத்திய பங்களிப்பு திட்டமானது, உற்பத்தியை அதிகரித்தல், மதிப்புக் கூட்டலை ஊக்குவித்தல் மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட வேளாண்மை மற்றும் அதுசார்ந்த துறைகளின் வளர்ச்சிக்கான முழுமையான அணுகுமுறையை மேற்கொள்ள மாநிலங்களை ஊக்குவிக்கிறது.

பட்டு விவசாயிகளிடையே, பட்டுப்புழு வளர்ப்பிற்கு மர மல்பெரி பயிரிட மற்றும் இயற்கை

விவசாயத்தை ஊக்குவிக்க, இத்துறையானது, வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறையுடன் ஒருங்கிணைந்து தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமான மானவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மர மல்பெரி சாகுபடி மற்றும் மண்புழு உரக்குழிகள் அமைக்க உதவித்தொகை வழங்கி வருகிறது.

2022–2023–ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (RKVY) – மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 625.00 ஏக்கரில் மர மல்பெரி நடவு செய்வதற்கும், 500 மண்புழு உரக்குழிகள் கட்டுவதற்கும் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (RKVY) – மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 250.00 எக்டரில் மர மல்பெரி நடவு செய்வதற்கும், 100 மண்புழு உரக்குழிகள் கட்டுவதற்கும் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



மர மல்பெரித் தோட்டம்




மண்புழு உர அலகு

## 5.4. பட்டுப்புழுவளர்ப்பிற்கான காப்பீட்டுத் திட்டம்

பட்டுக்கூடு உற்பத்தியில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட பயிர்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023-ஆம் ஆண்டில், ரூ.39.861 இலட்சம் தொகை காப்பீட்டு சந்தாவிற்காக அரசால் வழங்கப்பட்டுள்ளது. பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப்புழு பாதிக்கப்பட்ட புழுப்பருவத்தின் அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம் மூலம், நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. தனிநபர் விபத்து மற்றும் விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் சேதத்துக்கான காப்பீடும் இத்திட்டத்தில் அடங்கும். மாநிலம் முழுவதிலும் 420 பட்டு விவசாயிகளுக்கு ரூ.35.187 இலட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 6. பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

மாநிலத்தில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்கவும், மேம்படுத்திடவும் பட்டுவளர்ச்சித் துறையானது பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

| அரசு உட்கட்டமைப்பு | வ. எண் | பெயர் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆதார விதைப் பண்ணைகள் | 1 | பி3 விதைப் பண்ணைகள் | 5 | 19 |
| | 2 | பி2 விதைப் பண்ணைகள் | 8 | |
| | 3 | பி1 விதைப் பண்ணைகள் | 6 | |
| வித்தகங்கள் | 1 | மாநில அரசு வித்தகங்கள் | 10 | 12 |
| | 2 | மத்திய பட்டு வாரிய வித்தகங்கள் | 2 | |
| குளிர்பதன அலகுகள் | 1 | பல்நிலை குளிர்பதன அலகுகள் | 3 | 3 |
| அரசு பட்டுப் பண்ணைகள் | 1 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் | 6 | 32 |
| | 2 | கலப்பின பட்டுப் பண்ணைகள் | 6 | |
| | 3 | விவசாயிகள் பயிற்சி மையங்கள் | 10 | |
| | 4 | இளம்புழுவளர்ப்புப் பண்ணைகள் | 5 | |
| | 5 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள் | 4 | |
| | 6 | பட்டு உலகம் – பட்டுச் சுற்றுலா மையம் | 1 | |
| தொழில்நுட்ப சேவை மையங்கள் | 1 | விதை | 3 | 105 |
| | 2 | விரிவாக்கம் | 102 | |
| அரசு பட்டுக்கூடு அங்காடிகள் | 1 | விதைக்கூடு அங்காடி | 1 | 22 |
| | 2 | பட்டுக்கூடு அங்காடிகள் | 21 | |
| அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள் | 1 | பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் கூடிய பட்டு நூற்பகங்கள் | 4 | 8 |
| | 2 | பட்டு முறுக்கேற்றும் அலகுகள் இல்லாது தனித்து இயங்கும் பட்டு நூற்பகங்கள் | 4 | |
| பயிற்சி நிலையம் | 1 | தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம் | 1 | 1 |
| பட்டு பரிமாற்றகம் | 1 | அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளை | 2 | 2 |
| கூட்டுறவு சங்கங்கள் | 1 | பட்டுத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 26 |
| | 2 | தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் | 1 | |

## 6.1. ஆதார பட்டுப்புழு விதை உற்பத்திப் பண்ணைகள்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைத்தொகுதிகளை அரசு வித்தகங்களில் உற்பத்தி செய்யத் தேவையான விதைக்கூடுகள் (பெற்றோர்) ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.



பி2 விதைப்பண்ணை, மசினகுடி

பட்டுப்புழு விதை உற்பத்தியில் மூன்றடுக்கு முறையில் (பி3 –> பி2–> பி1) பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரிப்பதற்கென துறையின் கீழ் 19 விதைப்பண்ணைகள் செயல்பட்டுவருகின்றன.

பி1 அளவில் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்டுமுட்டைகளின் தேவையை பூர்த்தி செய்திட, விதைக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆதார விதைக் கூடு உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளையும் கலப்பின வீரியத்தையும் பராமரிப்பதில் விதைப்பண்ணைகள் மற்றும் வித்தகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**2022–2023–ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் விதைக்கூடு உற்பத்தி, வர்த்தக ரீதியிலான பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருவாய்**

| மாவட்டம் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | பணி | விதைக் கூடு உற்பத்தி (இலட்சம் எண்களில்) | வர்த்தக ரீதியிலான பட்டுக் கூடு உற்பத்தி (கி.கி.) | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| கிருஷ்ண கிரி | 1 | பேரிகை | பி3 | 0.941 | | 1.701 |
| | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 1.062 | | 3.647 |
| | 3 | ஓசூர் | பி2 | 1.526 | | 3.887 |
| | 4 | கலுக்கொண்டப் பள்ளி | பி3 | 1.098 | | 1.654 |
| | 5 | தளி | பி3 | 0.864 | | 2.122 |
| | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 2.154 | | 6.056 |
| | 7 | உளிமங்கலம் | பி2 | | 428.000 | 2.698 |
| | 8 | மேலகிரி | பி2 | 1.639 | | 3.136 |
| | 9 | கோலட்டி | பி1 | 0.986 | 926.600 | 12.184 |
| தருமபுரி | 10 | சித்தேரி | பி1 | 1.314 | 66.400 | 3.615 |
| ஈரோடு | 11 | ஆசனூர் | பி2 | | 197.500 | 1.446 |
| | 12 | மாதஹள்ளி | பி1 | | 806.050 | 5.172 |

| மாவட்டம் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | பணி | விதைக் கூடு உற்பத்தி (இலட்சம் எண்களில்) | வர்த்தக ரீதியிலான பட்டுக் கூடு உற்பத்தி (கி.கி.) | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| நீலகிரி | 13 | குன்னூர் | பி3 | | 53.500 | 0.365 |
| | 14 | மசினகுடி | பி2 | 2.715 | 145.760 | 3.127 |
| | 15 | மசக்கல் | பி2 | 1.436 | 61.900 | 2.394 |
| திருப்பத்தூர் | 16 | அத்தனாவூர் | பி1 | | 192.700 | 1.049 |
| நாமக்கல் | 17 | கொல்லிமலை | பி1 | 0.718 | | 2.181 |
| தேனி | 18 | மயிலாடும்பாறை | பி2 | 1.193 | | 3.490 |
| தென்காசி | 19 | செங்கோட்டை | பி1 | 2.032 | 48.000 | 5.198 |
| | | மொத்தம் | | 19.678 | 2926.41 | 65.122 |

## 6.2. வித்தகங்கள்

ஆதார விதைப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதைக் கூடுகளைக் கொண்டு வர்த்தக ரீதியிலான நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்யும் மையங்கள், 'வித்தகங்கள்' என அழைக்கப்படுகிறது.

நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதற்கென 10 மாநில அரசு வித்தகங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, மத்திய பட்டு வாரியத்தின் கீழ் இயங்கும் தேசிய பட்டுப்புழு விதைக் கழகத்தின் (National Silkworm Seed

Organisation) 2 வித்தகங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

2022–2023–ஆம் ஆண்டில், இந்த 10 அரசு வித்தகங்களில் 48.093 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## 2022–2023–ஆம் ஆண்டில் அரசு வித்தகங்களில் பட்டுமுட்டை உற்பத்தி

| மாவட்டம் | வ. எண். | வித்தகத்தின்பெயர் | உற்பத்தி (முட்டைத் தொகுதிகள் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் (இருசுழற்சி) | 8.230 |
| | 2 | கிருஷ்ணகிரி (இருசுழற்சி) | 16.969 |
| தருமபுரி | 3 | சோகத்தூர் (இருசுழற்சி) | 2.847 |
| | 4 | பென்னாகரம் (இருசுழற்சி) | 1.975 |
| கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் (இருசுழற்சி) | 3.693 |
| ஈரோடு | 6 | ஈரோடு (இருசுழற்சி) | 4.650 |
| | 7 | தாளவாடி (இருசுழற்சி) | 2.094 |
| திருப்பத்தூர் | 8 | வாணியம்பாடி (இருசுழற்சி) | 4.690 |
| திருச்சிராப்பள்ளி | 9 | திருச்சிராப்பள்ளி✶ (இருசுழற்சி) | 0.049 |
| தென்காசி | 10 | குற்றாலம் (இருசுழற்சி) | 2.896 |
| மொத்தம் | | | 48.093 |

✶ இந்த கலப்பின வித்தகம், பிப்ரவரி 2023 மாதத்தில் இருசுழற்சியின வித்தகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 6.3. பல்நிலை குளிர்பதன அலகுகள்

வெண்பட்டுக்கான தேவை அதிகரித்து வருவதால். தமிழ்நாடு விவசாயிகள் 97 சதவீதம் இருசுழற்சியின (வெண்பட்டு) பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

பட்டுப்புழுவானது பொதுவாக ஓர் ஆண்டில் ஒன்று, இரண்டு மற்றும் பல வாழ்க்கைச் சுழற்சி முறைகளைக் கொண்டுள்ளது. இவை முறையே ஒரு சுழற்சி இனம், இரு சுழற்சி இனம் மற்றும் பல சுழற்சி இனம் என அழைக்கப்படுகிறது. துயில் நிலை அற்ற இனங்களில் (பல சுழற்சியினம்) முட்டையிட்ட நாளிலிருந்து 10 நாட்களிலும், துயில் நிலை இனங்களில் (ஒரு சுழற்சி இனம் மற்றும் இரு சுழற்சி இனம்) முட்டையிட்ட நாளிலிருந்து சுமார் 6–10 மாதங்கள் கழித்தும் முட்டைத் தொகுதிகள் பொரித்துவிடும்.

இரு சுழற்சி இன பட்டுப்புழுக்கள் வருடத்திற்கு 2 வாழ்க்கை சுழற்சியினை கொண்டுள்ளன. இந்த பட்டு முட்டைத் தொகுதிகள் சாதாரண சூழலில் எதிர்பார்க்கும் நேரத்தில் பொரிப்பு ஆகாது என்ற தனித்தன்மை உடையவை.

வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்கு பட்டு முட்டையினை முறையாக பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும். பட்டு முட்டையின் முறையற்ற பாதுகாப்பு சீரான முட்டை பொரிப்பினை பாதிப்பதுடன் பட்டுப்புழுக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினையும், தரமான பட்டுக்கூடு உற்பத்தியினையும் மட்டுப்படுத்துகின்றது.

எனவே, இரு சுழற்சியின பட்டுமுட்டைகள் சீரான முட்டை பொரிப்பிற்கு குளிர்பதன அறையில் 120 நாட்கள் முதல் 300 நாட்கள் வரையில் 2.5° செல்சியஸ் முதல் 25° செல்சியஸ் வரையிலான வெவ்வேறு வெப்ப நிலைகளில், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதனம் செய்வது அத்தியாவசியமாகிறது. இரு சுழற்சியின முட்டைத் தொகுதிகளை குளிர்பதனம் செய்வதன் மூலம் ஆண்டு முழுவதும் பட்டு விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப முட்டை விநியோகம் செய்வது எளிதாகின்றது.

இருசுழற்சியின பட்டு முட்டைகளை தேவைக்கேற்ப விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கிருஷ்ணகிரி & ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் சின்னவேடம்பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் மூன்று பல்நிலை

குளிர்பதன அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 2022-2023-ஆம் ஆண்டில், இம்மூன்று பல்நிலை குளிர்பதன அலகுகளில் 48.093 இலட்சம் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டுள்ளன.



**அரசு பல்நிலை குளிர்பதன அலகு, கிருஷ்ணகிரி**

2022–2023–ஆம் ஆண்டில் அரசு பல்நிலை குளிர்பதன அலகுகளில் பதனப்படுத்தப்பட்டுள்ள முட்டைத் தொகுதிகள்

| மாவட்டம் | வ. எண். | பல்நிலை குளிர்பதன அலகின் பெயர் | பதனப்படுத்தப்பட்ட முட்டைத் தொகுதிகள் (இலட்சம் எண்களில்) | |
|---|---|---|---|---|
| | | | 2022 – 2023 | முட்டை இருப்பு (31.03.2023 இல்) |
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 10.205 | 3.872 |
| | 2 | கிருஷ்ணகிரி | 24.555 | 10.872 |
| கோயம்புத்தூர் | 3 | சின்னவேடம்பட்டி | 13.333 | 6.082 |
| | | மொத்தம் | 48.093 | 20.826 |

கூடுதலாக, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையத்தில் நிறுவப்பட்டு வரும் 10.00 இலட்சம் நோயற்ற பட்டு முட்டைகள் பதனப்படுத்தும் திறன் கொண்ட ஒரு பல்நிலை குளிர்பதன அலகு, 2023–2024–ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

## 6.4. அரசு பட்டுப் பண்ணைகள்

அரசு பட்டுப் பண்ணைகள் பல்வேறு பட்டுவளர்ச்சி செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவை,

- தரமான மல்பெரி நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம்
- தரமான இளம்புழுக்களை (2–ஆம் பருவம் வரையிலான இளம் பட்டுப்புழுக்கள்) வளர்த்தல் மற்றும் விநியோகம் செய்தல்
- பட்டுப்புழுவளர்ப்பு செயல்பாடுகள்
- நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம் அளித்தல்
- பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல்.

இத்துறையின் கீழ் 32 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாடுகளுக்கேற்ப அவை வகைப்படுத்தப்படுகின்றன.

| பண்ணையின் வகை | எண் |
|---|---|
| செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் | 6 |
| அரசு கலப்பின பட்டுப்பண்ணைகள் | 6 |
| விவசாயிகள் பயிற்சி மையங்கள் | 10 |
| இளம்புழு வளர்ப்புப் பண்ணைகள் | 5 |

| பண்ணையின் வகை | எண் |
|---|---|
| மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள் | 4 |
| பட்டு உலகம் (பட்டு சுற்றுலா மையம்) | 1 |
| **மொத்தம்** | **32** |




**அரசு பட்டுப் பண்ணை, நாடானூர், திருவண்ணாமலை**

## 2022-2023-ஆம் ஆண்டில் அரசு பட்டுப் பண்ணைகளின் வருவாய்

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓசூர் | 0.271 |
| | 2 | கலப்பின பட்டுப் பண்ணை, ஊத்தங்கரை | 2.306 |

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| தருமபுரி | 3 | விவசாயிகள் பயிற்சி மையம், சோகத்தூர் | 1.120 |
| | 4 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, பாப்பாரப்பட்டி | 0.579 |
| சேலம் | 5 | பட்டு உலகம், ஏற்காடு | 0.210 |
| | 6 | விவசாயிகள் பயிற்சி மையம், நத்தக்கரை | 2.716 |
| | 7 | கலப்பின பட்டுப் பண்ணை, மணியார்குண்டம் | 0.950 |
| | 8 | கலப்பின பட்டுப் பண்ணை, புதூர் | 0.761 |
| கள்ளக்குறிச்சி | 9 | கலப்பின பட்டுப் பண்ணை, வெள்ளிமலை | 0.741 |
| ஈரோடு | 10 | விவசாயிகள் பயிற்சி மையம், தாளவாடி | 2.404 |
| | 11 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை இராமாபுரம் | 0.641 |
| | 12 | கலப்பின பட்டுப் பண்ணை, கீர்மாளம் | 0.080 |
| திருப்பூர் | 13 | விவசாயிகள் பயிற்சி மையம், மைவாடி | 0.526 |
| காஞ்சிபுரம் | 14 | விவசாயிகள் பயிற்சி மையம், விச்சந்தாங்கல் | 1.356 |
| திருப்பத்தூர் | 15 | விவசாயிகள் பயிற்சி மையம், மின்னூர் | 1.233 |
| திருவண்ணாமலை | 16 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாடானூர் | 0.905 |
| திருப்பத்தூர் | 17 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, புலியூர் | 1.048 |
| கடலூர் | 18 | விவசாயிகள் பயிற்சி மையம், நெய்வேலி | 1.230 |

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | 19 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், உப்பிலியாபுரம் | 0.457 |
| | 20 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கலிங்கப்பட்டி | 0.595 |
| | 21 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கருக்கமடை | 0.546 |
| | 22 | கலப்பின பட்டுப் பண்ணை, பச்சமலை | 0.688 |
| | 23 | விவசாயிகள் பயிற்சி மையம், மணிகண்டம் | 2.001 |
| தஞ்சாவூர் | 24 | விவசாயிகள் பயிற்சி மையம், நாஞ்சிக்கோட்டை | 1.754 |
| திண்டுக்கல் | 25 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, சி.கே.புதூர் | 1.580 |
| சிவகங்கை | 26 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாகம்பட்டி | 0.600 |
| | 27 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓ.புதூர் | 1.480 |
| இராமநாதபுரம் | 28 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், பாண்டியூர் | 1.979 |
| திருநெல்வேலி | 29 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், திருநெல்வேலி (இருப்பு) வி.எம்.சத்திரம் | 1.178 |
| விருதுநகர் | 30 | விவசாயிகள் பயிற்சி மையம், திருவில்லிபுத்தூர் | 2.016 |
| | 31 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, செவலூர் | 2.077 |
| கன்னியாகுமரி | 32 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், கோணம் | 1.536 |
| | | மொத்தம் | 37.564 |




**மல்பெரி நாற்றாங்கால்**
**அரசு பட்டுப் பண்ணை, வி.எம்.சத்திரம், திருநெல்வேலி**

## 6.4.1. இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்தது முதல், இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, 'இளம்புழுவளர்ப்பு' என்றழைக்கப்படுகிறது. சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்ப– வெப்பநிலைகளைப் பராமரிப்பதிலும், தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழுவளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது.

இளம்புழுவளர்ப்பு செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்கள் 'இளம்புழுவளர்ப்பு மையங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

மாநிலத்தில் வெற்றிகரமான இரு சுழற்சியின பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழுவளர்ப்பு முறை திகழ்கிறது. இளம்புழுவளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதால், பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு காலத்தில் 7 நாட்கள் சேமிக்கப்படுவதுடன், பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்க உதவுகிறது.

26 அரசு பட்டுப் பண்ணைகள் மூலம் பட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான இளம்புழுக்கள் வளர்த்து விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.



**இளம்புழு வளர்ப்பு**
**அரசு பட்டுப் பண்ணை, வி.எம்.சத்திரம், திருநெல்வேலி**

அரசு இளம்புழுவளர்ப்பு மையங்கள் தவிர 39 தனியார் இளம்புழுவளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

## 6.5. தொழில்நுட்ப சேவை மையங்கள்

மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப்புழுவளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை பட்டு விவசாயிகளுக்கு அவர்களது இல்லம் தேடிச்சென்று

வழங்கிட 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.




**தொழில்நுட்ப சேவை மையம், கிருஷ்ணகிரி**

ஒவ்வொரு தொழில்நுட்ப சேவை மையத்திலும் ஓர் பட்டு ஆய்வாளர் / உதவி பட்டு ஆய்வாளர் தலைமையில், 4–7 இளநிலை பட்டு ஆய்வாளர்கள், பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

மேலும், இத்தொழில்நுட்ப சேவை மையங்கள் விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சித் துறையின்

பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களைப் பெறவும் உதவுகின்றன.

## தொழில்நுட்ப சேவை மையங்கள்

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் அலுவலகம் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக் கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர்<br>திருப்பூர்<br>ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப் பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர்<br>திருப்பத்தூர்<br>இராணிப்பேட்டை<br>திருவள்ளூர்<br>காஞ்சிபுரம்<br>செங்கல்பட்டு | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள் | 13 | திருவண்ணா மலை | 6 |
| | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி<br>கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் அலுவலகம் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| திருச்சிராப் பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர்<br>பெரம்பலூர்<br>நாகப்பட்டினம்<br>மயிலாடுதுறை | 15 | திருச்சிராப்பள்ளி | 8 |
| | நாமக்கல்<br>கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல்<br>சிவகங்கை | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி<br>மதுரை<br>இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | தென்காசி<br>திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி | 19 | தென்காசி | 7 |
| | | | மொத்தம் | 105 |

## 6.6. அரசு விதைக்கூடு அங்காடி, ஓசூர்

அரசு விதைக்கூடு அங்காடி, ஓசூர் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, 'பி1' விதைக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மற்றும் அரசு ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விற்பனைக்கு எடுத்துவரப்படும் இருசுழற்சியின விதைக்கூடுகள் இங்கு

பரிவர்த்தனை செய்யப்பட்டு தரமான விதை உற்பத்திக்காக வித்தகங்களுக்கு வழங்கப்படுகிறது. விதைக் கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

2022-2023-ஆம் ஆண்டில், இவ்விதைக்கூடு அங்காடியில் 35,585 கிலோகிராம் விதைக்கூடுகள் ரூ.348.560 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

### 6.7. அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

அரசு பட்டுக்கூடு அங்காடிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, இடைத்தரகர்களை நீக்கி, விவசாயிகள் தங்களது பட்டுக்கூடுகளை விற்பனை செய்தல் மற்றும் பட்டுநூற்பாளர்கள் தங்களது மூலப் பொருளை வாங்குவதற்கான சந்தை வசதிகளை வழங்குகிறது. பட்டுக்கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.


மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 21 அரசு பட்டுக்கூடு அங்காடிகள் உள்ளன.

2022–2023–ஆம் ஆண்டில், இந்த பட்டுக்கூடு அங்காடிகளில் 1,801 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.10,041.760 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

### 2022–2023–ஆம் ஆண்டில் அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடு பரிவர்த்தனை

| மாவட்டம் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | பட்டுக் கூடுகள் (மெட்ரிக் டன்களில்) | பரி வர்த்தனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 49.091 | 272.592 |
| | 2 | கிருஷ்ணகிரி | 25.678 | 135.497 |
| தருமபுரி | 3 | பென்னாகரம், பாலக்கோடு | 33.293 | 141.557 |
| | 4 | தருமபுரி | 583.260 | 3467.088 |
| சேலம் | 5 | சேலம் | 95.662 | 442.648 |
| கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் | 240.483 | 1322.387 |
| ஈரோடு | 7 | ஈரோடு | 74.905 | 450.666 |
| | 8 | தாளவாடி | 22.300 | 147.003 |
| திருப்பூர் | 9 | மைவாடி | 130.338 | 702.083 |
| திருப்பத்தூர் | 10 | வாணியம்பாடி | 74.888 | 411.402 |
| திருவண்ணா–மலை | 11 | திருவண்ணா மலை | 11.496 | 63.017 |
| திருச்சிராப் பள்ளி | 12 | திருச்சிராப் பள்ளி | 11.337 | 49.197 |
| புதுக்கோட்டை | 13 | புதுக்கோட்டை | 10.862 | 56.397 |
| நாமக்கல் | 14 | இராசிபுரம் | 124.608 | 600.322 |
| திண்டுக்கல் | 15 | திண்டுக்கல் | 15.626 | 59.917 |
| | 16 | பழனி (இருப்பு) சி.கே.புதூர் | 16.617 | 61.785 |

| மாவட்டம் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | பட்டுக் கூடுகள் (மெட்ரிக் டன்களில்) | பரி வர்த்தனை மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| சிவகங்கை | 17 | சிவகங்கை | 29.879 | 173.380 |
| தேனி | 18 | தேனி | 92.077 | 551.653 |
| தென்காசி | 19 | நன்னகரம் | 81.250 | 483.008 |
| விருதுநகர் | 20 | திருவில்லிபுத் தூர் | 57.126 | 330.570 |
| கன்னியாகுமரி | 21 | நாகர்கோவில் | 20.296 | 119.591 |
| மொத்தம் | | | 1801.072 | 10041.760 |




**கடந்த மூன்று ஆண்டுகளில் பட்டுக்கூடுகளின் சராசரி விலை**

விவசாயிகளின் பட்டுக் கூடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதால், 2021–2022–ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022–2023–ஆம் ஆண்டில் பட்டுக்கூடுகளின் சராசரி விலை 16 சதவீதம் உயர்ந்துள்ளது.

பட்டுக்கூடுகள் பரிவர்த்தனையில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்திட அனைத்து அரசு பட்டுக்கூடு அங்காடிகளிலும் மின்னணு ஏல முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.8. அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுத் தொழிலின் முக்கிய பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணைபுரிவதற்காக, பட்டுநூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழில்முனைவோர்களுக்கான மாதிரி அலகுகளாக அரசு பலமுனை பட்டுநூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

அரசு பட்டு நூற்பகங்கள், பட்டுக்கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்திப் பொருளான பட்டுக் கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன.



அரசு பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு, தாளவாடி

இத்துறையின் கீழ் 8 அரசு பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த 8 அரசு பட்டு நூற்பு அலகுகளில், ஓசூர், சேலம், தாளவாடி மற்றும் நன்னகரம் ஆகிய இடங்களில் உள்ள பட்டு நூற்பு அலகுகள் பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு கச்சாப்பட்டு நூல் முறுக்கேற்றிய பட்டு நூலாக மாற்றப்படுகிறது.

## 2022-2023-ஆம் ஆண்டில் அரசு பட்டு நூற்பு அலகுகளில் பட்டு உற்பத்தி மற்றும் வருவாய்

| மாவட்டம் | வ. எண் | அலகின் பெயர் | கச்சாப் பட்டு உற்பத்தி (கி.கி) | முறுக்கேற்றிய பட்டு உற்பத்தி (கி.கி) | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 2025.00 | 524.60 | 99.678 |
| சேலம் | 2 | சேலம் | 1676.95 | 485.65 | 76.441 |
| ஈரோடு | 3 | தாளவாடி | 1428.80 | 362.30 | 67.673 |
| திருப்பத்தூர் | 4 | வாணியம் பாடி | 523.65 | 0 | 20.713 |
| புதுக்கோட்டை | 5 | புதுக்கோட்டை | 1297.55 | 0 | 52.091 |
| சிவகங்கை | 6 | சிவகங்கை | 2360.00 | 0 | 108.833 |
| தென்காசி | 7 | நன்னகரம் | 2870.00 | 2142.00 | 129.194 |
| கன்னியா குமரி | 8 | கோணம் | 2266.65 | 0 | 100.530 |
| மொத்தம் | | | 14448.60 | 3514.55 | 655.153 |

2022-2023-ஆம் ஆண்டில், அரசு பட்டு நூற்பு அலகுகளில் கச்சாப் பட்டு, முறுக்கேற்றிய பட்டு மற்றும் இதர உபப் பொருட்கள் விற்பனை மூலம் ரூ.655.153 இலட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

### 6.9. தனியார் பட்டு நூற்பகங்கள்

மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளின் நுகர்வினை அதிகரிக்கவும், பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும்

பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யவும், தொழில்முனைவோர்களை இலாபகரமான பட்டுநூற்புத் தொழிலில் ஈடுபட ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகளை பட்டு வளர்ச்சித்துறை எடுத்து வருகிறது.

பட்டுநூற்பு அலகுகளை நிறுவிட தொழில்முனைவோர்களை ஊக்குவித்து பட்டுக்கூட்டிற்கு பிந்தைய பிரிவினை வலுப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளை முழுமையாக மாநிலத்திற்குள்ளாகவே பயன்படுத்திட இயலும்.

தற்போது தமிழ்நாட்டில் 155 தனியார் பட்டு நூற்பகங்கள் இயங்கி வருகின்றன.

**தனியார் பட்டு நூற்பு அலகுகள்**

| வ. எண் | பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சர்க்கா பட்டுநூற்பு அலகுகள் | 15 |
| 2 | காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள் | 84 |
| 3 | பலமுனை பட்டுநூற்பு அலகுகள் | 46 |
| 4 | தானியங்கி பட்டுநூற்பு அலகுகள் | 9 |
| 5 | தானியங்கி டூபியான் பட்டுநூற்பு அலகு | 1 |
| **மொத்தம்** | | **155** |



**பலமுனை பட்டு நூற்பு அலகு, கரூர்**




**தானியங்கி பட்டு நூற்பு அலகு, சூளகிரி**



தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகு, உடுமலைப்பேட்டை



பட்டுமுறுக்கேற்றும் அலகு, கரூர்

2023–2024–ஆம் ஆண்டில், 400 முனைகள் கொண்ட ஏழு தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 200 முனைகள் கொண்ட இரண்டு தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 142 முனைகள் ஒரு தானியங்கி டூபியான் பட்டுநூற்பு அலகும் நிறுவிட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பட்டுநூற்பு அலகுகள் ஆண்டொன்றுக்கு 273.00 மெட்ரிக் டன் கச்சாப் பட்டுநூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.


### 6.10. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டுநூல் காஞ்சிபுரம் மற்றும் சேலத்தில் செயல்பட்டு வரும் அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, பட்டு நூற்பாளர்கள் தங்களது உற்பத்திப் பொருளான கச்சாப்பட்டு நூலை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது.

பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கு நிலவும் சந்தை விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப் பட்டுநூல் ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் 'டான்சில்க்' போன்றோர், வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டுநூலினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுநூலின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.



**அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், சேலம் கிளையில் கச்சாப்பட்டு ஏலம் நடைபெறுதல்**




**கடந்த மூன்று ஆண்டுகளில் கச்சாப் பட்டுநூலின் சராசரி விலை**

2022-2023-ஆம் ஆண்டில், அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளைகளில் 149.691 மெட்ரிக் டன் கச்சாப் பட்டுநூல் ரூ.5,947.885 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

**2022-2023-ஆம் ஆண்டில் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகங்களில் கச்சாப்பட்டு பரிவர்த்தனை**

| வ. எண் | பட்டின் வகை | அளவு (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கச்சாப் பட்டு | 104.299 | 5,105.667 |
| 2 | டூபியான் பட்டு | 45.392 | 842.218 |
| **மொத்தம்** | | **149.691** | **5,947.885** |

கச்சாப்பட்டுநூல் பரிவர்த்தனையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட அரசு அண்ணா பட்டு பரிமாற்றகங்களில் மின்னணு ஏல முறை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.11. தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டுவளர்ச்சித் துறையின் களப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும், புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினை பட்டுவளர்ச்சித் துறை கொண்டுள்ளது.

அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி குறித்த விவரங்கள்:

| வ. எண். | பயிற்சியின் பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | மத்திய பகுதித் திட்டம்: விவசாயிகள் பயிற்சி | 5 நாட்கள் |
| 2. | ஆத்மா அலுவலர் பயிற்சி | 3 நாட்கள் |
| 3. | அலுவலர்களுக்கான களப் பயிற்சி | 5 நாட்கள் |

'பட்டுமலர்' எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/– என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டுவளர்ச்சிக்கு உதவிடும் வகையில் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்து கொள்ள இது துணைபுரிகிறது.



**தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்**

## 6.12. கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் 'தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம்' (டான்சில்க்) தலைமைக் கூட்டுறவு இணையம்

மற்றும் 25 இதர பட்டுத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 6.12.1. தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுத்தொழிலுக்கு தேவைப்படக் கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவது, மூலப்பொருட்களை ஆயத்தப் பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவது, ஆயத்தப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் சங்க உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது போன்றவை, இந்த தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளாகும்.

### 6.12.2. தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக, பதிவு செய்யப்பட்டு, காஞ்சிபுரத்தில் இயங்கிவருகிறது.

இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இவ்விணையம் பெருமளவு கச்சாப் பட்டினை கொள்முதல் செய்து, தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் 'டான்சில்க்' இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டுநூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக விற்பனை செய்யப்படுகின்றன.

**2022–2023–ஆம் ஆண்டில் டான்சில்க், காஞ்சிபுரத்தின் பட்டுநூல் கொள்முதல் மற்றும் விற்பனை**

| வ. எண் | பட்டின் வகை | கொள்முதல் | | விற்பனை | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. கோடியில்) | அளவு (மெட்ரிக் டன்களில்) | மதிப்பு (ரூ. கோடியில்) |
| 1. | கச்சாப் பட்டு | 107.224 | 52.754 | 105.262 | 52.578 |
| 2. | டூபியான் பட்டு | 45.392 | 8.485 | 45.392 | 8.571 |
| 3. | முறுக்கேற்றிய பட்டு | 126.802 | 74.404 | 126.802 | 74.425 |
| | மொத்தம் | 279.418 | 135.643 | 277.456 | 135.574 |

## 7. பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு

பட்டுவளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட, விரிவாக்க அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டுவளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 3 |
| 3 | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 4 | துணை இயக்குநர் | 9 |
| 5 | உதவி இயக்குநர் | 27 |
| 6 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 7 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 8 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 824 |
| 9 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 316 |
| | **மொத்தம்** | **1,427** |

## 8. நிலையான வளர்ச்சி இலக்குகள்

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே வறுமையிலிருந்து விடுபட்ட, மிக வளமான மற்றும் முற்போக்கான மாநிலமாக ஆக்குவதுடன், அதன் மக்கள் ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் அடைந்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கையை உலகத்தின் பிற பகுதிகளுடன் இயைந்து வாழ வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டம் ஆகும்.

பட்டுத்தொழில் பல்வேறு வழிகளில் பொருளாதார ரீதியாக பயனளிக்கிறது. முதலாவதாக, பட்டு உற்பத்தியில் ஈடுபடும் பட்டு விவசாயிகள்

மற்றும் பட்டுத்தொழில் மேற்கொள்பவர்களுக்கு சீரான வருமானத்தை தருகிறது. இது வறுமையிலிருந்து மீளவும், கிராமப்புற வளர்ச்சிக்கும் உதவுகிறது. இரண்டாவதாக, பட்டு வளர்ப்பின் குறைவான அறுவடை காலம், குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஆகியன பட்டுத்தொழிலை சிறந்த வருவாய் அளிக்கக்கூடிய தொழிலாக மாற்றுகிறது. மூன்றாவதாக, குறிப்பாக ஆடம்பரப் பொருட்களுக்கான சந்தையில், பட்டின் தேவை ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதால், பட்டுத் தயாரிப்புகளுக்கு அதிக விலை கிடைக்கிறது. இறுதியாக, பட்டு வளர்ப்பு, பெண்கள், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதோடு, பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் வறுமையை குறைக்கவும் உதவுகிறது. ஒட்டுமொத்தமாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் ஆற்றலை பட்டுத்தொழில் கொண்டுள்ளது.

## 9. துறையின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு மென்பொருள் உருவாக்குதல்

நோயற்ற பட்டுமுட்டைத் தொகுதிகள் (Disease Free Layings – DFLs) உற்பத்தி முதல் கச்சாப்பட்டு உற்பத்தி வரையிலான துறையின் அனைத்து செயல்பாடுகளையும் உடனுக்குடன் கண்காணித்து, குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை சரிசெய்யும் நோக்கத்தில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குவதற்கு, ERP (Enterprise Resource Planning) போன்று ஒரு மென்பொருள் உருவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, முடிவுறும் தருவாயில் உள்ளது. இந்த மென்பொருள் பயனாளர்களின் உபயோகத்திற்கு ஏற்றதாகவும், பிழைகள் ஏதும் இன்றியும் இருப்பதை உறுதி செய்திட, மென்பொருளின் ஒவ்வொரு தொகுதிகளும் அதை சார்ந்த பயனாளர்கள் மூலம் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

## 10. 2023–2024–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2023–2024–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | | 2023–2024 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **திட்டப்பணிகள்** | | |
| அ | 1. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | 150.00 | 370.00 |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி **(கணக்குகள் இடையே மாற்றம்)** | 220.00 | |
| ஆ | புதிய திட்டங்கள் | | 2091.97 |
| இ | மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| ஈ | சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| உ | இராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா | | 100.03 |
| | **திட்டப் பணிகள் மொத்தம்** | | 2562.02 |
| 2 | **திட்டம் சாரா பணிகள்** | | |
| | அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித் தொகைகள் முதலியன | | 6647.86 |
| | **ஒட்டுமொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)** | | 9209.88 |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

### 1. முன்னுரை

தமிழ்நாடு சங்க காலத்திலிருந்து கைவினைப்பொருட்களின் வளமான களஞ்சியமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டின் கைவினைப்பொருட்கள் தொன்றுதொட்டு வரும் நமது பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகமானது தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களின் பொக்கிஷமாக விளங்குகிறது, இந்நிறுவனம் 1973–ஆம் ஆண்டு அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களால் ஒரு பொதுத் துறை நிறுவனமாக துவக்கப்பட்டது. இது மாநிலத்தின் கைவினைப் பொருட்களுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம் அதன் வணிகப் பெயரான "பூம்புகார்" மூலம் நன்கு அறியப்படுகிறது. கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பிரபலப்படுத்துவதும்

சந்தைப்படுத்துவதும் இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பல்நோக்கு நலத்திட்டங்களையும் மேம்பாட்டுத் திட்டங்களையும் முனைப்புடன் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

## 2. நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்

- தமிழ்நாட்லுள்ள கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.
- கைவினைஞர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்.
- கைவினைஞர்களின் உற்பத்தியை அதிகரித்து அவர்களின் உற்பத்தித் தரத்தை உயர்த்துதல்.
- உற்பத்தித் திறனில் புதிய வடிவமைப்புகளையும், புதுமைகளையும் அறிமுகப்படுத்துதல்.

- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்து, கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளை நீக்குதல்.


- கைவினைஞர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார உதவிகளை உறுதிசெய்தல்.

- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள், கைவினைஞர்களின் விவரங்களை டிஜிட்டல் முறையில் ஆவணமாக்கி பதிவு செய்து சந்தை வாய்ப்புகளை விரிவாக்குதல்.

- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் கடின உழைப்பு, கலைப்படைப்பு மற்றும் அர்ப்பணிப்பை விருதுகள் வழங்கி அங்கீகரித்தல்.

- மாநில மற்றும் ஒன்றிய அரசின் கைவினைக் கலைஞர்களுக்கான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

# 3. நிர்வாக அமைப்பு



நிறுவன அட்டவணை
இயக்குநர் குழு
தலைவர்
மேலாண் இயக்குநர்
பணி மேலாளர்
நிதி மேலாளர்
விற்பனை மற்றும் உற்பத்தி மேலாளர்
உதவி மேலாளர் (பொது)
அலுவலக கண்காணிப்பாளர்
முதுநிலை உதவியாளர்
இளநிலை உதவியாளர்
சுருக்கெழுத்து தட்டச்சர்
தட்டச்சர்
தொலைபேசி இயக்குபவர்
ஓட்டுனர்
அலுவலக உதவியாளர்
உதவி மேலாளர் (கணிணி செயல்பாடுகள்)
அலுவலக கண்காணிப்பாளர்
முதுநிலை உதவியாளர்
இளநிலை உதவியாளர்
உதவி மேலாளர் (நிதி)
வணிக கணக்காளர்
கணக்காளர்
உதவி மேலாளர் (கணக்கு)
வணிக கணக்காளர்
கணக்காளர்
உதவி மேலாளர் (தணிக்கை)
வணிக கணக்காளர்
கணக்காளர்
தலைமை அலுவலகம்
சந்தைப் பிரிவு
உதவி மேலாளர் (பொது)
அலுவலக கண்காணிப்பாளர்
முதுநிலை உதவியாளர்
இளநிலை உதவியாளர்
வளர்ச்சி பிரிவு
உதவி மேலாளர் (பொது)
அலுவலக கண்காணிப்பாளர்
இளநிலை உதவியாளர்
விற்பனை நிலையம்
மேலாளர் நிலை-I
மேலாளர் நிலை-II
மேலாளர் நிலை-III
வணிக கணக்காளர்
கணக்காளர்
முதுநிலை விற்பனை உதவியாளர்
விற்பனை உதவியாளர்
இளநிலை உதவியாளர்
தட்டச்சர்
கட்டுனர்
அலுவலக உதவியாளர்
காவலாளர்
துப்புரவாளர்
உற்பத்தி நிலையம் உதவி மேலாளர் (தொழில் நுட்பம்)
அலுவலக கண்காணிப்பாளர்
முதுநிலை உதவியாளர்
இளநிலை உதவியாளர்
மேலாளர் (உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு)
வணிக கணக்காளர் / கணக்காளர்
கைவினைஞர் நிலை-I
கைவினைஞர் நிலை-II
பண்டகக் காப்பாளர்
தட்டச்சர்
அலுவலக உதவியாளர்
காவலாளர்

## 3.1. நிறுவன அமைப்பு

### தலைமை அலுவலகம்

இந்நிறுவனம் தலைவர், இயக்குநர்கள் குழு உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். இந்நிறுவனத்தின் செயலாக்க அதிகாரியாக மேலாண் இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு அனைத்து நிர்வாக அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

மேலாண் இயக்குநரைத் தொடர்ந்து இரண்டாம் நிலை அதிகாரிகள், விற்பனை மற்றும் உற்பத்தி மேலாளர், நிதி மேலாளர், பணி மேலாளர் உள்ளனர். அதைத் தொடர்ந்து உதவி மேலாளர் ஒவ்வொரு பிரிவுக்கும் கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் உள்ளனர்.

விற்பனை நிலையம்

பூம்புகார் விற்பனை நிலையங்களானது, விற்பனை நிலைய மேலாளர்களின் தலைமையின்கீழ், கணக்காளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

## 4. நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

நிலையான வளர்ச்சி இலக்குகள், ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்காக வகுக்கப்பட்டுள்ளன, இது சிறந்த எதிர்காலத்திற்காக வகுக்கப்பட்ட செயல் திட்ட குறிகாட்டிகளுடன் பதினேழு இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

நீண்ட கால மற்றும் குறுகிய கால நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பின்பற்றுகிறது. கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், பயிற்சி, சந்தைப்படுத்தல், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் நேரடி உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப்பொருட்கள் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைப்படுத்தி அவர்களுக்கு வருமானம் ஈட்ட உதவியாக உள்ளது.

நிலையான வளர்ச்சியின் முக்கிய குறிக்கோள்களில் பின்வரும் இலக்குகளை பூம்புகார் நிறுவனம் கொண்டுள்ளது.

**இலக்கு (1) : வறுமையின்மை:**

**(1.1.) எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் தீவிர வறுமை ஒழிப்பு:**

கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில், மாநில மற்றும் ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்துவதன் மூலம் புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், வருவாயை அதிகரிக்கவும், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பப் பட்டறைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

2022–2023–ஆம் ஆண்டில் சுமார் 200 கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் இலவச உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் இளம் கைவினைஞர்கள் ஆவார்கள்.

கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் இந்தியாவின் முக்கிய நகரங்களில் விற்பனையுடன் கூடிய கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

மேலும், பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்து அவர்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுகிறது.

கைவினைஞர்களின் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கைவினைஞர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளன.

**இலக்கு [8]: கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி:**

**(8.5) அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் ஆக்கவளமுள்ள வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்குதல்:**

நீண்ட கால உத்தியாக முக்கிய கைவினைப் பொருட்களுக்கு 11 பொது வசதி மையங்கள் மற்றும்

3 நலிந்து வரும் கைவினை பொருட்களான களிமண், சுடுகளிமண் மற்றும் பத்தமடை பாய் போன்ற கைத்திறத் தொழில்களுக்கு பொது வசதி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பொது வசதி மையங்களில் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனை கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் சுமார் 5,000 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

முப்பரிமாண நவீன மாதிரிகள் தயாரிக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC) நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறான முயற்சிகளால் மாற்றுத்திறனாளி கைவினைஞர்கள் உட்பட அனைத்து வயதுடையவர்கள் மற்றும் ஆண், பெண் இருபாலரும் போதுமான வருவாயினை பெற இயலும்.

## 5. சந்தைப்படுத்துவதற்கான செயல்பாடுகள்

### 5.1. விற்பனை நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மாமல்லபுரம்,

புது தில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் 12 விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. மேலும், வண்டலூர் உயிரியல் பூங்கா, சென்னை & கோயம்புத்தூர் விமான நிலையங்கள், எழும்பூர் அருங்காட்சியகம், சுவாமிமலை, கெவாடியா (குஜராத்) போன்ற இடங்களில் 9 சிறிய விற்பனைக் கூடங்கள் அமைத்து தமிழ்நாடு கைவினைக் கலைஞர்களின் படைப்புகளை உலக அளவில் சந்தைப்படுத்த உதவி செய்து வருகிறது.

அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் (Centralised Computer Billing) மையப்படுத்தப்பட்ட கணினி மூலம் விலைப்பட்டியல், கண்காணிப்பு கேமரா மற்றும் மின் அலுவலகம் (e–office) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 5.2. பூம்புகார் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல்

இந்நிறுவனம் 2022–2023–ஆம் நிதியாண்டில் சென்னை, கோயம்புத்தூர், புது தில்லி, கொல்கத்தா மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களை ரூ.6.00 கோடி செலவில் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சேலத்தில் ரூ.2.00 கோடி செலவில் புதிய விற்பனை நிலையம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.




**புதுப்பிக்கப்பட்ட பூம்புகார் விற்பனை நிலையம், கொல்கத்தா**

## 5.3. கண்காட்சிகள்

### 5.3.1. கருத்துசார் கண்காட்சி (Thematic Exhibition)

இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் கைவினை கலைஞர்கள் உற்பத்தி செய்யும் கலைப் பொருட்களை நேரடியாக விற்பனை செய்ய 57N உட்புற / வெளிப்புற கண்காட்சிகள் நடத்தப்பட்டன. மேலும் விற்பனை நிலையங்களில் கொலு பொம்மைகள், கிருஷ்ண தர்ஷன், கணேஷ்

தர்ஷன் போன்ற கருத்துசார் கண்காட்சிகள் இவ்வாண்டில் நடத்தப்பட்டது.

மாமல்லபுரத்தில் 44-வது செஸ் ஒலிம்பியாட் முன்னிட்டு 28.07.2022 முதல் 10.08.2022 வரை மற்றும் ஜி-20 உச்சிமாநாட்டை முன்னிட்டு 31.01.2023 மற்றும் 01.02.2023 ஆகிய நாட்களில் சிறப்பு கண்காட்சிகள் நடத்தப்பட்டன.



மாமல்லபுரம் நகர்ப்புறக் கண்காட்சி திடல் – செஸ் ஒலிம்பியாட்





**கைவினைப்பொருட்கள் கண்காட்சி மற்றும் செய்முறை விளக்கம் – சென்னை** – ஜி20 பிரதிநிதிகள் வருகையின் போது

### 5.3.2. **பிற கண்காட்சிகள்**

சிறப்பு கண்காட்சி நிகழ்வுகள் ஏற்காட்டிலும், புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம், அமைச்சரவை செயலகம், இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி, புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் கண்காட்சி ஆகிய கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

### 5.3.3. **சாலை நிகழ்ச்சி** (Road Show) – **ஸ்வீடன்**

தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களைப் பிரபலப்படுத்துவதற்காக, ஸ்வீடன் நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் (Sweden, Stockholm) தமிழ்ச் சங்கம் மூலம் "பண்டைய கால தமிழர் கலை மற்றும் கலாச்சாரம்" சாலைக் காட்சி செப்டம்பர் 2022–இல் நடத்தப்பட்டது.




**"பண்டைய கால தமிழர் கலை மற்றும் கலாச்சாரம்"**
சாலைக் காட்சி – ஸ்வீடன்

## 5.4. வாங்குவோர் – விற்போர் சந்திப்பு

எக்ஸ்போ மார்ட் கிரேட்டர் நொய்டாவில் 15.03.2023 முதல் 19.03.2023 வரை சர்வதேச பரிசு பொருட்கள் கண்காட்சியில் (Spring Fair) பூம்புகார் கலந்து கொண்டது. சர்வதேச அளவில் வாங்குவோர்– விற்போர் முகவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.




சர்வதேச பரிசுப்பொருட்கள் கண்காட்சி – கிரேட்டர் நொய்டா

## 5.5. B2B சந்தைப்படுத்துவதற்கான செயல்பாடுகள்

தமிழ்நாடு கைவினை கலைஞர்களின் கைவினைப் பொருட்களுக்கு உலகளாவிய சந்தையை உறுதி செய்வதற்காக, பூம்புகார் B2B முறையில் சந்தைப்படுத்த நேரடி மற்றும் இணைய வழி விற்பனையை செயல்படுத்தி வருகிறது. இதற்காக கைவினைப் பொருட்கள் மொத்தமாக கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், இணைய வழி (online) விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களுடனும் (Export houses) ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

## 5.6. ஏற்றுமதி

பூம்புகார் பாரம்பரிய கைவினைப் பொருட்களை சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோக சிற்பங்கள், பித்தளை அலங்கார விளக்குகள், மரத்திலான அலங்கார பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் மற்றும் பல கைவினைப் பொருட்கள் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.


கடந்த ஆண்டில் பூம்புகார் ரூ.1.45 கோடி ஏற்றுமதி செய்துள்ளது.

## 5.7. வணிக வளர்ச்சி

பூம்புகார் தனது வணிக நடவடிக்கைகளை பல்வகைப்படுத்தியுள்ளது. அதில் ஒரு பகுதியாக அரசு அலுவலகங்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றை கைவினைப் பொருட்களைக் கொண்டு அழகுபடுத்துதல், அலங்கார வேலைகள், உட்புற அலங்காரம் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பித்தளை சலவைப் பெட்டிகள் வழங்குதல், வர்த்தக நிறுவனங்களுக்கான கைவினைப் பரிசு பொருட்கள், பதக்கங்கள், கோப்பைகள் மற்றும் நினைவுப் பொருட்கள் (சிறிய அளவிலான பிரபலமான கோயில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள்) ஆகிய சிறப்பு திட்டங்கள் மூலம் 2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.5.15 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 5.8. ஆண்டு விற்பனை அளவு

2022–2023–ஆம் நிதியாண்டில் 31.03.2023 முடிய இந்நிறுவனம் ரூ.40.00 கோடி விற்பனை செய்துள்ளது.




## 5.9. மின் வணிகம் மூலம் விற்பனை

பூம்புகார் கைவினைப் பொருட்களை உலகளாவிய அளவில் விற்பனை செய்வதற்காக www.poompuhar.com என்ற மின் வணிக தளத்தின் மூலம் விற்பனை செய்கிறது. மேலும், அமோசான் (Amazon), பிளிப்பார்ட்டி (Filpkart), எக்ஸோடிக் (Exotic) மற்றும் டென்காலி (Denkali) போன்ற மின் வணிக

இணையதள நிறுவனங்களுடன் இணைந்து விற்பனை செய்து வருகிறது. மேலும், பூம்புகார் மற்ற மின் வணிக தள (e–Commerce) நிறுவனங்களுடன் இணைந்து மின் வணிகத்தை விரிவுபடுத்தும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.


## 6. பூம்புகார் உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம் நாச்சியார்கோயில் (பாரம்பரிய வெண்கல மற்றும் பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), வாகைக்குளம் (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்), தஞ்சாவூர் (கலை தட்டுகள்), கள்ளக்குறிச்சி (மரச் சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய 7 சொந்த உற்பத்தி நிலையங்களை கொண்டுள்ளது. இந்த உற்பத்தி மையங்களின் மூலம் கைவினை கலைஞர்களுக்கு தொடர்ச்சியாக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதியிலுள்ள கைவினைப் பொருட்களை தயாரிக்கும் கைவினைக் கலைஞர்களும் இந்த உற்பத்தி நிலையங்கள் மூலம் பயனடைந்து வருகின்றனர்.



பித்தளையிலான அன்னம் கிளை விளக்கு

2022–2023–ஆம் ஆண்டில் ரூ.3.25 கோடி மதிப்பிலான கைவினைப் பொருட்களை அதன் உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்துள்ளது.



## 7. தகவல் தொழில் நுட்ப செயல்பாடுகள்


தகவல் தொடர்பு தொழில்நுட்பப் (ICT) பயன்பாடு இந்நிறுவனத்தில் அனைத்து பிரிவுகளிலும் செயல்படுத்தப்படுகிறது. சந்தைத்திறன், நிதி மேலாண்மை திறன் மற்றும் நிர்வாகத்திறன் ஆகியவைகளை மேம்படுத்துவதற்காக பின்வரும் நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

- கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான தகவல் மின் தொகுப்பு உருவாக்குதல்.
- பூம்புகார் உடனான வாடிக்கையாளர்கள் / வாங்குவோரின் அனுபவத்தினை மற்றும் நம்பகத்தன்மையை உருவாக்குதல்.
- நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு சேவைகளை வழங்குதல்.

### 7.1. நிர்வாக சீர்த்திருத்தங்கள்

- மின் தளம்: www.poompuhar.com என்ற வலைதளம் அனைத்து பங்குதாரர்களையும் கைவினைப்

பொருட்கள் மற்றும் பூம்புகார் பற்றி அறியும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.




- மின் வருகை: பயோ மெட்ரிக் வருகை முறை நடைமுறையில் உள்ளது.


- மின் தொடர்பு: இந்நிறுவன அலுவலகம், அனைத்து விற்பனைநிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றில் வைஃபை (Wi–Fi) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

- நாடு முழுவதும் உள்ள கைவினைஞர்களை டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் பயன்பெற கரிகார் (KARIGAR) திட்டத்தின் கீழ் மின்–

வணிகம் நிறுவனமான அமேசானுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 7.2. சந்தை வாய்ப்பில் சீர்த்திருத்தங்கள்

அ) பூம்புகார் தனது பொருட்களை உலக அளவில் நேரடியாக மின் வணிகம் (Online) மூலம் விற்பனை செய்வதற்கு www.poompuhar.com என்ற சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. இந்நிறுவனம் பிற மின் வணிக நிறுவனங்களான அமேசான் (Amazon), பிளிப்காட் (Flipkart) மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து தனது தயாரிப்புகளின் விற்பனையை மேற்கொள்கிறது.




அமேசான் மின் வணிகம்

ஆ) பூம்புகாரின் விற்பனை நிலையங்கள் இணைய வழிகள் மூலம் விற்கப்படும் அனைத்து கைவினைப் பொருட்களுக்கும் மின்னணு விலைக் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இ) பூம்புகாரின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் மையப்படுத்திய கணினிமயமாக்கப்பட்ட மின் விலைச்சீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.

ஈ) பூம்புகார் முகநூல் (Facebook), டுவிட்டர் (Twitter), யூடியூப் (Youtube) மற்றும் இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்யவும், உலகளவில் சந்தை வாய்ப்பை பெறவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

## 7.3. பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் (Virtual Reality Poompuhar Showroom)

பூம்புகார் தனது சென்னை விற்பனை நிலையத்தில் மெய்நிகர் தோற்ற தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளது. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் வடிவமைப்பு குழுவினர், பூம்புகார் படைப்புகளை மெய் நிகர் தொழில் நுட்பம்

மூலம் முப்பரிமாண வடிவில் உருவாக்கி, முப்பரிமாண அச்சு எந்திரம் வாயிலாக அச்சடிக்கப்பட்டு, அந்த பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக வடிவமைப்புக்குழு தயாரித்து, அதனை மெய்நிகர் தோற்ற இணையகத்தில் (Virtual Reality Server) நிறுவப்படுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் அந்த முப்பரிமாணப் பொருட்களை தங்களது மெய் நிகர் தோற்றக் கரங்களால் தேர்ந்தெடுத்து, அப்பொருள் குறித்த தங்களது கருத்துகளை பதிவு செய்யவும், அப்பொருட்களை மின் வணிக வர்த்தகம் மூலம் கொள்முதல் செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.




மெய்நிகர் தோற்றக் காட்சி

## 7.4. உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலி (Augmented Reality App)

இந்நிறுவனம் உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலி (Augmented Reality App) என்ற செயலியை உருவாக்கியுள்ளது. கைவினைப் பொருட்களை முப்பரிமாணத்தில் காட்சிப்படுத்தி, வாடிக்கையாளர்கள் உருப்பெருக்கும் மெய்தோற்ற செயலியின் மூலம் வீடு/தேவைப்பட்ட இடங்களில் மெய்நிகராக அலங்கரித்துக் காட்டி கைவினைப் பொருட்களை மின்வணிகம் மற்றும் பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாக கொள்முதல் செய்ய ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்களின் வாங்கும் ஆர்வம் ஊக்குவிக்கப்படுகிறது.

## 7.5. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC)

பூம்புகார் நிறுவனம் முப்பரிமாண வடிவமைப்பு முப்பரிமாண அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இக்காலத்திற்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC) உருவாக்கப்பட்டுள்ளது..

இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 2022–2023–ஆம் நிதியாண்டில் புதிய முன்மாதிரி பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருவன:


- ஜல்லிக்கட்டு
- தமிழ் நாட்டின் நடனங்கள்
- ஐந்து ரதங்கள்
- அர்சுனன் தபசு



ஜல்லிகட்டு




தமிழ்நாட்டின் நடனங்கள்



ஐந்துரதங்கள்




அர்சுனன் தபசு

## 8. கைவினைஞர்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள்

கைவினைஞர்களின் நலனே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்நிறுவனம் பாடுபட்டு வருகிறது. பூம்புகார் நிறுவனம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்களை இந்நிறுவனத்தின் தனிப்பிரிவான மேம்பாட்டு பிரிவு (Development Cell) மூலம் செயல்படுத்தி வருகிறது.

### 8.1. விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கைத்திறத் தொழிலில் தனித்திறமைக் கொண்ட

கைவினைஞர்களை பாராட்டி அங்கீகரிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட விருதுகளை வழங்குகின்றது:

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது
2. பூம்புகார் மாநில விருது
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது
4. பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது
5. கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது
6. குழு உற்பத்தி விருது
7. அடுத்த தலைமுறை கைவினைஞருக்கான கைத்திறப் போட்டி விருது

## விருதுகளின் விவரங்கள்

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | ரூ.1.00 இலட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.10,000/–ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 85 |
| 4 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 2 |
| 5 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |
| 6 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/– ரொக்கம்,4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர்– களுக்கான கைத்திறப் போட்டி விருது | ரூ.2,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | **மொத்தம்** | | **263** |

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவமிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது" 13.04.2022 அன்று வழங்கப்பட்டது.**




**மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் "பூம்புகார் மாவட்ட விருதுகள்" 16.03.2023 அன்று வழங்கப்பட்டது.**

## 8.2. பொது வசதி மையங்கள்

பொது வசதி மையங்கள் கைவினைஞர்களுக்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்ட உற்பத்தி மையம் ஆகும். பல கைவினைக் குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொது வசதி மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதி, அங்குள்ள நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை

பயன்படுத்தி கைவினைப்பொருட்களை தயாரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இங்கு CNC இயந்திரங்கள், முப்பரிமாண அச்சு இயந்திரங்கள், மின் உலைகள், 4 அச்சு செதுக்குதல் இயந்திரம், நவீன மரம் செதுக்கும் இயந்திரம் மற்றும் அச்சு கருவிகள் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இவை வேலையில் ஏற்படும் இடர்களை தவிர்த்து புதிய வடிவமைப்புகளை உருவாக்க, கைவினைஞர்களின் உற்பத்தி செயல்திறனை மேம்படுத்துகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம்–காகிதக்கூழ் பொம்மைகள், அரும்பாவூர்–மரச்சிற்பங்கள், தம்மம்பட்டி–மரச்சிற்பங்கள், அம்பாசமுத்திரம்–மரவர்ணக் கடைசல் பொம்மைகள் மற்றும் ஆசனூர்–ஒன்னிக்குச்சி கைவினைப் பொருட்கள் ஆகிய கைத்திறத் தொழில்களுக்கான 5 பொது வசதி மையங்களை அப்பகுதியில் வாழும் கைவினைஞர்கள் பயனடையும் வகையில் 13.04.2022 அன்று துவக்கி வைத்தார், இப்பொது வசதி மையங்களில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதால், கைவினைப்பொருட்களின் உற்பத்தி மேம்பட்டுள்ளது. இவை தலா ரூ.60.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது வசதி மையங்கள் 13.04.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.**

மேலும் 6 பொது வசதி மையங்கள் சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை, வாகைக்குளம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஏற்கனவே கைவினைஞர்களின் பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகிறது. இப்பொது வசதி மையங்களின் மூலம் தோராயமாக 5,000 கைவினைஞர்கள் பயனடைந்து வருகிறார்கள்.




ஆசனூர் –ஒன்னிக்குச்சி கைத்திறத் தொழிலுக்கான பொது வசதி மையம் – ஈரோடு மாவட்டம்




தம்மம்பட்டி – மரச்சிற்பக் கைத்திறத் தொழிலுக்கான பொது வசதி மையம் – சேலம் மாவட்டம்

## 8.3. நலிந்த கைத்திறத் தொழில்களை புத்துயிரூட்ட பொது வசதி மையங்கள் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.04.2022 அன்று நலிந்த கைத்திறத்

தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் கோரைப்பாய்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் களிமண் & சுடுகளிமண் கைத்திறத் தொழிலுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய இரண்டு பொது வசதி மையங்களை துவக்கி வைத்தார். இப்பொது வசதி மையங்கள் தலா ரூ.47.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.



**நலிந்த கைத்திறத் தொழிலான பாய் நெசவு கைவினைப் பொருளுக்கு பொது பயன்பாட்டு மையம் – பத்தமடையில் அமைக்கப்பட்டுள்ளது.**

## 8.4. உபகரணங்கள் வழங்குதல்

இந்நிறுவனம் தமிழ்நாடு முழுவதுமுள்ள கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் ரூ.5,000/– மதிப்பிலான உபகரணங்களை 6,000–திற்கும் மேற்பட்ட கைவினைஞர்களுக்கு இலவசமாக வழங்கி உள்ளது.

## 8.5. பயிற்சித் திட்டங்கள்/பட்டறைகள்

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் IDPH (Integrated Development and Promotion of Handicrafts) திட்டத்தின்கீழ் 40 கைவினைஞர்களுக்கு ரூ.14.85 இலட்சம் செலவில் தஞ்சாவூர் (கலைத்தட்டு), நாச்சியார்கோவில் (பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்) மற்றும் தம்மம்பட்டி (மரச்சிற்பம்) ஆகிய கைத்திறத் தொழில்களில் 3 மாத கால கைத்திறத்தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 200 கைவினைஞர்கள் பயிற்சிப் பெற்றார்கள்.



**பஞ்சலோகத் கைத்திறத் தொழிலுக்கான பயிற்சி – சுவாமிமலை**

## 8.6. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறை

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு முழுவதும் 27 இடங்களில் தலா ரூ.4.60 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 810 கைவினைஞர்கள் பயிற்சிப் பெற்றார்கள்.



**மூங்கில் மற்றும் பிரம்பு கைத்திறத் தொழிலுக்கான பயிற்சி – வாலாஜாபேட்டை**

## 8.7. நகர்ப்புற கண்காட்சித் திடல்கள்

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலாத்

தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடல், உள்நாடு / சர்வதேச சுற்றுலா பயணிகள்/ நுகர்வோர்களை கவரும் வகையில் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

### 8.7.1. கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்

பூம்புகார் நிறுவனம், கன்னியாகுமரியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் ஒரு நகர்ப்புறக் கண்காட்சித் திடலை வர்த்தக உட்கட்டமைப்புடன் அமைத்துள்ளது. இக்கண்காட்சித் திடல் 50 கடைகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இக்கண்காட்சித்திடல் கைவினைஞர்கள் சுழற்சி முறையில் பங்கு பெற்று பயனடைவார்கள்.






**கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்**

## 8.7.2. மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்

பூம்புகார் நிறுவனம் மற்றும் ஒரு நகர்ப்புற கண்காட்சித்திடலை சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ரூ.4.24 கோடி செலவில் வர்த்தக கட்டமைப்புடன் கட்டியுள்ளது. இக்கண்காட்சி திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 50 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.





மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்

## 8.8. கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village)

சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் "கைவினை சுற்றுலா கிராமம்" என்ற ஒன்றிய அரசின் திட்டத்தை ரூ.2.24 கோடி செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) மூலம் அப்பகுதியிலுள்ள கைவினைஞர்கள் நலனுக்காக செயல்படுத்தி உள்ளது.

கைவினை சுற்றுலா கிராமத் திட்டத்தில், கைவினைஞர்களுக்கு வீடுகள், உற்பத்தி நிலையங்கள் மற்றும் காட்சிப் பகுதிகள் ஆகியவைகளை புதிதாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடங்களை மாமல்லபுரத்திலுள்ள சுற்றுலாத் தலங்களுடன் இணைத்து இங்கு தயாரிக்கும் கற்சிற்பப் பொருட்களை, இங்கு வருகை புரியும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்வதோடு இந்த வரலாற்று சிறப்பு மிக்க இடத்தை சுற்றுலா பயணிகளை கவருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ரூ.1.80 கோடி செலவில் மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் முடிவடைந்துள்ளன:

- காரணை கிராமத்தில் 30 கைவினைஞர்களின் வீடுகள் அழகுபடுத்தப்பட்டு, முகப்புச்சுவர் அமைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு, சிமெண்ட் சாலை மற்றும் வடிகால்வாய் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

- ஐந்துரத வீதியில் உள்ள கைவினைஞர்களின் உற்பத்தி நிலையங்கள் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரமாண்டமான சிற்பக்கலைத்தூண் சுற்றுலா பயணிகள் மற்றும் பார்வையாளர்களை கவரும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.07.2022 அன்று திறந்து வைத்தார்.

- கைவினை சுற்றுலா கிராமத்திற்கான விளம்பர பதாகைகள் மற்றும் வழிகாட்டிகளை பல்வேறு இடங்களில் அமைத்தல்.



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.07.2022 அன்று 'சிற்பக் கலைத்தூண்' திறந்து வைக்கப்பட்டது.**




**மாமல்லபுரம், ஐந்துரத வீதியில் கைவினைஞர்களின் தொழில்பட்டறைகளை அழகுபடுத்துதல்**





**காரணை கிராமத்தில் கைவினைஞர்களின் வீடுகளை அழகுபடுத்துதல்**

## 8.9. கைவினை விழிப்புணர்வு முகாம்கள்

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைத் தொழிலாளர் துறை மூலம் (சம்பந்தப்பட்ட உதவி ஆணையர்கள்) கைவினைக் கலைஞர்களுக்கு தெரிவிக்கவும், அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகத் திட்டங்களை, அமைப்பு சாரா கைவினைஞர்களுக்கு பெறுவதற்கு உதவும் நோக்கத்துடன், தமிழ்நாடு மற்றும் ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களை விளக்குவதற்காக கைவினைஞர்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் 2022–2023–ஆம் ஆண்டு நடத்தப்பட்டன.

## 9. கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு

புவிசார் குறியீடு பதிவு பெறப்பட்ட பொருட்கள் ஒன்றிய அரசின் புவிசார் குறியீடு பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்டம் – 1999 அதன் கீழ் உருவாக்கப்பட்ட 2002 விதிகளின்படி நிர்வகிக்கவும், பாதுகாக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் புவிசார் குறியீடு பதிவகம், பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியினால் கீழ்க்கண்ட

தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

1. நாச்சியார்கோயில் பித்தளை விளக்குகள்
2. பத்தமடை பாய்கள்
3. தோடா சித்திரத் தையல்
4. மாமல்லபுரம் கற்சிற்பங்கள்
5. சுவாமிமலை பஞ்சலோகச் சிலைகள்
6. வடசேரி கோயில் நகைகள்
7. தஞ்சாவூர் கலைத்தட்டுகள்
8. தஞ்சாவூர் ஓவியங்கள்
9. தஞ்சாவூர் பொம்மைகள்
10. கள்ளக்குறிச்சி மரச்சிற்பம்
11. கருப்பூர் கலம்காரி ஓவியம்
12. தஞ்சாவூர் நெட்டி வேலை
13. அரும்பாவூர் மரச்சிற்பம்

இந்த புவிசார் குறியீட்டின் மூலம் அப்பகுதியில் உள்ள தமிழ்நாட்டு கைவினைஞர்களின் படைப்புகள் உலகளாவிய சந்தை அணுகுமுறைக்கு வாய்ப்பாக அமையப்பெறும்.

## 10. மாமல்லபுரம் – ஓர் உலக கற்சிற்ப நகரம்

உலக கைத்திறக் குழுமம் (World Crafts Council) மாமல்லபுரத்தை "உலக கற்சிற்ப நகரம்" என்று அங்கீகரித்துள்ளது. இது மாமல்லபுர கற்சிற்ப கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும். இது பூம்புகார் மற்றும் இந்திய கைத்திறக் குழுமம் (Craft Council of India) முயற்சியால் பெறப்பட்டுள்ளது.

## 11. 2022–2023–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளின் முன்னேற்றம்

### 11.1. மரச்சிற்பக் கைவினைக் கிராமம் – தம்மம்பட்டி

சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் மரச்சிற்பக் கைத்திறத் தொழில் செய்யும் கைவினைக் கலைஞர்களின் நலனுக்காக மரச்சிற்பக் கைவினைக் கிராமத்தை உருவாக்க தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் முன்மொழிந்துள்ளது. அதற்காக 5.5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

## 11.2. 13 பொது வசதி மையங்களின் செயல்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்த ஆலோசகரை நியமித்தல்

தமிழ்நாட்டில் 13 பொது வசதி மையங்களை வியாபாரயுக்தியுடன் இயக்கவும், பராமரிக்கவும், உகந்த முறையில் செயல்படுத்தவும், நேரடிப் பயிற்சி அளிப்பதற்காகவும், புதிய வடிவமைப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை நியமித்துள்ளது. 13 பொது வசதி மையங்களுக்கான விரிவான அறிக்கை மற்றும் பகுப்பாய்வு (SWOT analysis) தயாரிக்கப்பட்டு கைவினைஞர்களுக்கான பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

## 11.3. கைவினைஞர்களின் கலைப்பொருட்கள் புகைப்படம் எடுத்தல் மற்றும் ஆவணப்படுத்துதல்

மாநிலம் முழுவதும் உள்ள கைவினைஞர்களின் கைவினைப் பொருட்களை புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தி, பூம்புகார் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, கைவினைப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது.

இதுவரை பல்வேறு பிரிவுகளின் கீழ் 4560 வகையான கைவினைப் பொருட்களின் புகைப்படம் எடுக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

## 11.4. தமிழ்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களின் முக்கியத்துவத்தை கைவினைப்பொருட்கள் மூலம் பிரபலப்படுத்துதல்

தமிழ்நாட்டின் செழுமையான பாரம்பரியங்கள், சுற்றுலாத் தலங்கள், கோயில்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கைவினைப் பொருட்கள் மூலம் முன்வைத்து பிரபலப்படுத்த, வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகிறது.

மாமல்லபுரம் அர்ச்சுனன் தபசு, ஐந்து ரதங்கள், கடற்கரை கோவில், ஜல்லிக்கட்டு, பாரம்பரிய நடனங்கள், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, வள்ளுவர்கோட்டம் சின்னம், சென்னை கலங்கரை விளக்கம், பிரசித்திபெற்ற சுற்றுலா நினைவுச் சின்னங்கள் போன்ற கலை உருவங்களை எழுதுகோல்தாங்கி மற்றும் சுவர் அலங்கார பொருட்களாக சிறிய அளவில் அழகுணர்வுடன் வடிவமைத்து தயாரிக்கப்பட்டுள்ளன.

## 11.5. வாங்குவோர்–விற்போர் சந்திப்பு

தமிழ்நாடு கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு பரந்த சந்தை வாய்ப்பை வழங்குவதற்காக, இந்நிறுவனம் சென்னையில் வாங்குவோர்–விற்போர் சந்திப்பை நடத்தியது. நொய்டாவில் நடத்தப்பட்ட இத்தகைய வாங்குவோர்–விற்போர் சந்திப்பில் இந்நிறுவனம் கலந்துகொண்டது.

## 11.6. கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிப்பட்டறைகள் நடத்துதல்

நவீன புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தவும், கைவினைப்பொருட்களை நல்ல வேலைப்பாடுகளுடன் விரைவாக உற்பத்தி செய்யவும், கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிப்பட்டறைகள் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய இடங்களில் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.7. இந்தியா முழுவதும் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தும் நிகழ்வுகளில் கைவினைஞர்கள் பங்கேற்க செலவினங்கள் மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு கைவினைஞர்களின் தயாரிப்புகளுக்கு சந்தைவாய்ப்புகளை பெறுவதற்கு நாட்டின் முக்கிய நகரங்களில் நடத்தப்படும் கண்காட்சிகளில் பங்கேற்கும் கைவினைஞர்களுக்கு விற்பனைக்கூடக் கட்டணம், போக்குவரத்துச் செலவு, ஏற்றுக்கூலி மற்றும் இறக்குக்கூலி ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 11.8. நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு முழுவதும் உள்ள கைவினைக் கலைஞர்களுக்கு **"கைவினைஞர்கள் விழிப்புணர்வு முகாம்கள்"** பின்வரும் நோக்கங்களுக்காக நடத்தப்பட்டன:

- தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தின் (https://tnuwwb.tn.gov.in) கீழ் கைவினைக் கலைஞர்களை சேர்ப்பது / புதுப்பித்தல் குறித்த விழிப்புணர்வு.

- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் இ–ஷ்ரம் போர்ட்டலின் (https://register.eshram.gov.in) கீழ் கைவினைக் கலைஞர்களை சேர்ப்பதற்கான விழிப்புணர்வு.

- கைவினைக் கலைஞர்களுக்கான "தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தின்" நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு.

- அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்). புது தில்லி அவர்களால் வழங்கப்படும் "PEHCHAN" கைவினைஞர்களுக்கான அடையாள அட்டையின் கீழ் கைவினைஞர்களின் பதிவு / புதுப்பித்தல் மற்றும் நலன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு.

தமிழ்நாடு முழுவதும் இதுவரை 20 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 1,250 கைவினைஞர்கள் கலந்து கொண்டனர்.



விழிப்புணர்வு முகாம் – தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்

## 12. நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வை

மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, புதிய சந்தைப்படுத்தல் வழிகள், கைவினைஞர்களுக்கு நேரடி உதவி போன்ற பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை செயல்படுத்த பூம்புகார் இலட்சியத் திட்டங்களைக் கொண்டுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் அதன் சொந்த வணிக வளர்ச்சிக்கு வலுவான நடவடிக்கைகளை எடுப்பதுடன், கைவினைஞர்களின் வருமானம் அதிகரிக்கவும் பல முயற்சிகள் மற்றும் புதுமைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

**"நமக்கு கதர் மீதான உள்ளார்ந்த உணர்வு இருந்தால், நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எளிமை நம்மைச் சூழ்ந்திருக்கும்."**

**–மகாத்மா காந்தியடிகள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 1959 தமிழ்நாடு சட்டம் 18–இன் படி ஏப்ரல் 1960–இல், கிராமப்புறங்களில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை மேம்படுத்தும் நோக்கில் அப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வழிகளை வழங்குவதற்காக ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது. இவ்வாரியம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

1. நோக்கங்கள்

1. கதர் மற்றும் கிராமத் தொழில்களைத் தொடங்குதல், ஊக்குவித்தல் மற்றும் நடத்துதல்.

2. கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து, முன்னேற்றி மேம்படுத்துதல்.

3. கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்.

4. கிராமத் தொழில்களுக்கான தொழிற்கூட்டுறவு சங்கங்களை அமைத்தல்.

5. சந்தைபடுத்தக்கூடிய சுற்றுச் சூழலுக்கு உகந்த கதர் கிராமத் தொழிற் பொருட்களை உற்பத்தி செய்தல்.

6. கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை ஏற்படுத்தி சுயசார்பு நம்பிக்கையை உருவாக்குதல்.

7. தகுதியுள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்பை வழங்குதல்.

8. வடிவமைப்புகளில் புதுமைகளை புகுத்துதல்.

## 2. நிருவாகம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைவர் ஆவார். அலுவல் சார் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு: –

1. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.

2. அரசு துணைச் செயலாளர், நிதித்துறை.

3. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்.

5. நிதிநிலை ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

இவ்வாரியத்தின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான முக்கிய கொள்கை முடிவுகள் வாரியத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகள் வாரிய தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் தொழிலை மேம்படுத்துதல் மற்றும் கிராமத் தொழில்களை வளர்த்தல் ஆகிய இரண்டு முக்கியமான பணிகளில் கவனம் செலுத்துகிறது.

## 3. நிலையான வளர்ச்சி இலக்குகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது, வறுமை மற்றும் அதன் அனைத்து பரிமாணங்களையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு துணிச்சலான, உலகளாவிய ஒப்பந்தமாகும். மக்களுக்கும், புவிக்கும், செழிப்பூட்டும் வகையில் சமமான, நியாயமான மற்றும் பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதே இதன் இலக்காகும்.

பல்வேறு அரசாங்கங்களும், உலகெங்கிலும் உள்ள குடிமக்களின் குழுக்களும், சாதக பாதகங்களை கலந்தாலோசித்து எட்டப்பட்ட கருத்துக்களின் படி இலட்சிய இலக்குகளை அடைவதற்காகவே நிலையான வளர்ச்சி இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**இலக்கு 1: எல்லா இடங்களிலும் வறுமையை அதன் அனைத்து பரிமாணங்களிலும் முடிவுக்குக் கொண்டு வருதல்.**

**இலக்கு 1.1: ஒரு நாளைக்கு $ 1.25–க்கும் குறைவாக வருவாய் பெறும் மக்களிடம், காணப்படும் கடும் வறுமையை 2030–ஆம் ஆண்டுக்குள் ஒழிக்க வேண்டும்.**

சுயஉதவி குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்பு, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உரிய முறையில் தரத்தினை உயர்த்தி, பேக்கிங்கில் புதுமையைப் புகுத்தி, முறையாக விளம்பரப்படுத்தி, சந்தைப்படுத்தும் பணியை வாரியம் மேற்கொள்கிறது. இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு போதுமான வருவாய் கிடைப்பதால் அவர்களின் வறுமையை போக்கிட இயலும்.

இவ்வாரியம், அவர்களின் வணிக மேம்பாட்டிற்கு நிதியுதவி அளிப்பதால், அவர்களின் சமூக–பொருளாதார நிலை மேம்படுத்தவும் உதவுகிறது.

**இலக்கு 8: மதிக்கத்தக்க வேலை மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல்.**

**இலக்கு 8.5 உற்பத்தித் திறனுடன் கூடிய வேலைவாய்ப்பை அனைத்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உருவாக்குதல்.**

மேற்கண்ட இலக்கை எட்டும் வகையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், நூற்போர் மற்றும் நெய்வோர்களுக்கு குறிப்பாக கிராமப்புற மகளிருக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவர்களின் வருவாயை அதிகப்படுத்தி கண்ணியமான வாழ்விற்கு முன்னெடுத்துச் செல்கிறது.

## 4. கதர்

கதர் இயக்கம், சுதேசி துணிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்க மகாத்மா காந்தியடிகளால் தொடங்கப்பட்டது. கதர் துணிகளை அவரவர் கிராமங்களிலேயே உற்பத்தி செய்வதன் மூலம் ஆடைத் தேவையில் தன்னிறைவு அடைவதை இது

நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்தையும் ஒரு சுய-நிலையான தன்னாட்சி அமைப்பாக மாற்றவும், கிராமங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய நிறைவான வாழ்வை கிடைக்க செய்வதையும் இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கதர் என்பது பருத்தி, பட்டு, கம்பளி அல்லது இரண்டு வகை நூல் கலந்த, கையால் நூற்கப்பட்ட, கையால் நெய்யப்பட்ட இயற்கை இழையிலான துணியாகும். கதர் என்பது இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வியல் முறையை குறிப்பதாகும். மேலும், இந்திய கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது உதவுகிறது. கதர் துணிகள் வெப்பமண்டலமான இந்திய காலநிலைக்கு மிகவும் பொருத்தமானவையாகும்.

வாரியம், தற்போது மாறிவரும் நவீன சந்தைக்கேற்ப ஆடைப் பொருட்களை தயாரித்து, அதன் அலகுகளை பொருளாதார ரீதியில் இயக்கி, சந்தையிலுள்ள நிறுவனங்களின் தயாரிப்புகளுடன் போட்டி போட்டு வணிகம் செய்து வருகிறது.

## 4.1. கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா உற்பத்தி நடவடிக்கைகள் முழுமையாக கைமுறையில் நடைபெறுவதால், கிராமப்புற கைவினைஞர்களுக்கு அதிகளவிலான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகிறது. கை நூற்பு மற்றும் கை நெசவு பணிகள் பெரும்பாலும் பெண்களால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த முழு உற்பத்தி பணிகள், நூற்பு, நெசவு, வெளுத்தல் மற்றும் சாயமிடுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தின் மத்திய பட்டை பஞ்சு ஆலையிலிருந்து கொள்முதல் செய்யப்படும் பட்டை பஞ்சு, கிராமிய நூற்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த பட்டை பஞ்சு, நூற்பதற்காக நூற்பாளர்களுக்கு (1116 நூற்பாளர்கள்) வழங்கப்படுகிறது. இந்த பட்டைப் பஞ்சு நூலாக நூற்கப்பட்டு கதர் உபகிளைகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்த நூல், நெசவாளர்களுக்கு (224 நெசவாளர்கள்) வழங்கப்பட்டு, கோரா துணியாக உற்பத்தி செய்து கதர் உப கிளைகளில் திரும்பப் பெறப்படுகிறது.



நூற்பு மையம், ஆர்.என்.பட்டி, மதுரை மாவட்டம்

கோரா துணியிலிருந்து, வேட்டிகள், சட்டைகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், மெத்தை விரிப்புகள், சீருடை துணி மற்றும் பிற துணி இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



**நெசவு மையம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்**

சந்தையில் பாலியஸ்டர் வகைகள் மக்களிடையே பிரபலமாக உள்ளதால், சந்தையின் போக்கையும், வாடிக்கையாளர்களின் விருப்பத்தையும் கருத்தில் கொண்டு, கதர் கிராமத் தொழில் வாரியமும் பாலியஸ்டர் நூலுடன் பருத்தி நூலை முறையே 67:33 என்ற விகிதத்தில் கலந்து பாலியஸ்டர் துணிகளை உற்பத்தி செய்து வருகிறது.

## I. நூற்பு மையங்கள்

| வ. எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருப்பூர் | பூளவாடி |
| 2. | | அவிநாசி |
| 3. | | வெள்ளக்கோயில் |
| 4. | | கொளத்துப்பாளையம் |
| 5. | ஈரோடு | காவிலிபாளையம் |
| 6. | | கெட்டிச்செவியூர் |
| 7. | சேலம் | விருதாசம்பட்டி |
| 8. | | நார்த்தம்பட்டி |
| 9. | கோயம்புத்தூர் | சூலூர் |
| 10 | திருச்சிராப்பள்ளி | கருங்குளம் |
| 11. | கரூர் | தென்னிலை |
| 12. | நாமக்கல் | நாமக்கல் |
| 13. | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி |
| 14. | புதுக்கோட்டை | திருவரங்குளம் |
| 15. | மதுரை | அன்னமார்பட்டி |
| 16. | சிவகங்கை | கண்டனூர் |
| 17. | விருதுநகர் | வண்ணியம்பட்டி |
| 18. | | ஆர்.என்.பட்டி |
| 19. | | மங்காபுரம் |

| வ. எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 20. | தென்காசி | பாவூர்சத்திரம் |
| 21. | | பெருமாள்பட்டி |
| 22. | கன்னியாகுமரி | அகஸ்தீஸ்வரம் |
| 23. | | தேவிகோடு |
| 24. | | மூதலாறு |

## II. நெசவு மையங்கள்

| வ.எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருப்பூர் | பூளவாடி |
| 2. | | அவிநாசி |
| 3. | ஈரோடு | காவிலிபாளையம் |
| 4. | | கெட்டிச்செவியூர் |
| 5. | கோயம்புத்தூர் | சூலூர் |
| 6. | சேலம் | காட்டாம்பட்டி |
| 7. | கரூர் | தென்னிலை |
| 8. | நாமக்கல் | நாமக்கல் |
| 9. | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி |
| 10. | மதுரை | உசிலம்பட்டி |
| 11. | சிவகங்கை | கண்டனூர் |
| 12. | விருதுநகர் | வத்திராயிருப்பு |
| 13. | தென்காசி | கீழப்பாவூர் |
| 14. | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் |

2020–2021 முதல் 2022–2023 வரை கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பட்டை பஞ்சு, துணி உற்பத்தி மதிப்பு, நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட கூலி ஆகிய விவரங்கள் பின்வருமாறு: –

| வருடம் | பட்டை பஞ்சு கொள்முதல் | | நூற்பாளர்கள் | | நெசவாளர்கள் | | துணி உற்பத்தி மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | கிலோ | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பணியாற்றுபவர் (எண்ணிக்கை) | கூலி வழங்கியது (ரூ. இலட்சத்தில்) | பணியாற்று–பவர் (எண்ணிக்கை) | கூலி வழங்கியது (ரூ. இலட்சத்தில்) | |
| 2020–2021 | 3,780 | 7.77 | 1,116 | 83.18 | 224 | 44.82 | 377.59 |
| 2021–2022 | 57,505 | 120.20 | 1,049 | 115.00 | 291 | 76.23 | 569.90 |
| 2022–2023 | 50,750 | 135.60 | 1,116 | 104.25 | 224 | 105.70 | 720.66 |

இது தவிர, கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் சான்றளிக்கப்பட்ட 73 சர்வோதய சங்கங்கள், கதர் கிராமத் தொழில் வாரியத்தைப் போன்றே கதர் உற்பத்தி மற்றும் விற்பனையை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 2022–2023–ஆம் நிதியாண்டில் கதர் இரகங்களை உற்பத்தி செய்வதற்காக 1116 நூற்பாளர்கள் மற்றும் 224

நெசவாளர்களை நேரடியாக ஈடுபடுத்தியுள்ளது. இந்த அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்ய "காதி கிராப்ட்" என்ற பெயரில் 47 விற்பனை நிலையங்களை வாரியம் நடத்தி வருகிறது.

கதர் வாரிய அலகுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு: –

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | வருடம் | ஆரம்ப இருப்பு | உற்பத்தி | மொத்தம் | விற்பனை | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2020–2021 | 3582.77 | 377.59 | 3960.36 | 1297.29 | 2663.07 |
| 2. | 2021–2022 | 2663.07 | 509.61 | 3172.68 | 1504.41 | 1668.27 |
| 3. | 2022–2023 * | 1668.27 | 720.66 | 2388.93 | 1186.20 | 1202.73 |

* தணிக்கை செய்யப்படவில்லை.

## 4.2. கதர் பட்டு

வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே கதர் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது. கதர் பட்டு இரகங்கள் 6 பட்டு உபகிளைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களுக்கு மத்திய பட்டு வாரியத்தால் "சில்க்

மார்க்” முத்திரை வழங்கப்படுவதால், இப்பட்டு புடவைகள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. வாரியம், புதிய வடிவமைப்புகளுடன் கண்கவரும் வண்ணம் அச்சிடப்பட்ட/எம்பிராய்டரி வேலைப்பாடு கொண்ட பட்டுப் புடவைகளை உற்பத்தி செய்து வருகிறது. இவைகள் இளைய தலைமுறையினரிடையே பிரபலமடைந்துள்ளது. தரமான பட்டுப் புடவைகள், பட்டு வேட்டிகள் மற்றும் பட்டுத் துண்டுகள் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப உற்பத்தி செய்யப்படுகின்றன.




**பட்டு நெசவில் திறன் மேம்பாட்டு பயிற்சி, காட்டம்பட்டி, சேலம் மாவட்டம்**

வருடந்தோறும் 277 பட்டு நெசவாளர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ள பட்டு நெசவு மையங்களின் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

| வ.எண் | மாவட்டம் | நெசவு மையம் |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | கும்பகோணம் |
| 2. | | கபிஸ்தலம் |
| 3. | திண்டுக்கல் | நரிக்கல்பட்டி |
| 4. | சேலம் | சேலம் |
| 5. | | தாரமங்கலம் |
| 6. | கோயம்புத்தூர் | வடவள்ளி |

கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு: –

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | வருடம் | ஆரம்ப இருப்பு | உற்பத்தி | மொத்தம் | விற்பனை | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2020–2021 | 1437.81 | 311.17 | 1748.98 | 539.94 | 1209.04 |
| 2. | 2021–2022 | 1209.04 | 172.97 | 1382.01 | 629.03 | 752.98 |
| 3. | 2022–2023 * | 752.98 | 496.65 | 1249.63 | 657.29 | 592.34 |

* தணிக்கை செய்யப்படவில்லை.

## 4.3. நலத்திட்டங்கள்

### 4.3.1. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட நூற்போர் மற்றும் நெசவாளர்களின் நலனுக்காக, "கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்" என்ற பெயரில் 2010–2011–ஆம் ஆண்டில் ஒரு நல வாரியம் அமைக்கப்பட்டது. தற்போது இந்நல வாரியத்தில் 7933 உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த நல வாரியத்தால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண். | உதவிகளின் விவரம் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| | a | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000/– |
| | b | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000/– முதல் 1,00,000/– வரை |
| 2 | | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/– |
| 3 | | ஈமச்சடங்கு செலவு | 2,000/– |

| வ. எண். | உதவிகளின் விவரம் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 4 | | கல்வி உதவித் தொகை | |
| | a | 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | b | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| | c | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | d | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| | e | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| | f | முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு | 1,750/– |
| | g | முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 3,000/– |
| | h | தொழில் கல்வி பட்டப் படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000/– |
| | i | தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 4,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000/– |
| | j | ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி படிப்பிற்கு | 1,000/– |

| வ. எண். | | உதவிகளின் விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| | | விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி படிப்பிற்கு | 1,200/- |
| 5 | | திருமண உதவித் தொகை | 2,000/- |
| 6 | | மகப்பேறு உதவித் தொகை | |
| | a | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள், மகப்பேறுக்குப் பின் 3 மாதங்கள்) | 6,000/- |
| | b | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/- |
| 7 | | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/- வரை |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000/- |

2022-2023-ஆம் நிதியாண்டில் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு ரூ.23.00 இலட்சம் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி 1990-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித்தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பாக வழங்குகிறார்கள். வாரியமும் அதற்கு

ஈடான தொகையை பங்களிப்பாக வழங்குகிறது. நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் தங்கள் கணக்கில் இருக்கும் இருப்புத் தொகையிலிருந்து பண்டிகை, கல்வி, மருத்துவம் மற்றும் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் திருமணம் போன்றவற்றிற்கான செலவுகளை எதிர்கொள்ள எந்த நேரத்திலும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். நூற்போர் மற்றும் நெசவாளர்களின் கணக்கில் இருக்கும் இருப்புத் தொகை முழுவதும் அவர்கள் ஓய்வுபெறும் போது திரும்ப வழங்கப்படுகிறது. வாரியம், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித் தொகையுடன், அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு தொகையை, ஊக்கத் தொகையாக வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2022–2023–ஆம் நிதியாண்டில் 1617 கைவினைஞர்களுக்கு ரூ.73.85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**5. மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள்**

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு நல்ல வருமானம் தரும் தொழிலாக கிராமத் தொழில்களில்

மண்பாண்டத் தொழில் விளங்கி வருகிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டில் 34 மண்பாண்டத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 3816 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மண்பாண்டத் தொழிலாளர் குடும்பத்திற்கு மழைக்கால பராமரிப்புத் தொகையாக ரூ.5000/– வீதம் அரசு வழங்கி வருகிறது.

இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது: –

| வருடம் | மழைக்கால பராமரிப்புத் தொகை (ரூ). | பயனடைந்தோரின் எண்ணிக்கை | மொத்த தொகை (ரூ). |
|---|---|---|---|
| 2020–2021 | 5000.00 | 11,957 | 5,97,85,000 |
| 2021–2022 | 5000.00 | 11,822 | 5,91,10,000 |
| 2022–2023 | 5000.00 | 11,676 | 5,83,80,000 |

இது தவிர, 5,700 மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.20,400/– மதிப்புள்ள மின்சாரத்தால் இயங்கும் 5,700 சீலா மின்விசை மண்பாண்ட சக்கரங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் தேவையான நிதி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மீதமுள்ள 2,475 சீலா

மின்விசை மண்பாண்ட சக்கரங்களை உற்பத்தி செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 6. வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA)

### 6.1. கதர் கிராமத் தொழில்கள் ஆணையம்

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிப்பதற்காக 2010–2011–ஆம் ஆண்டு முதல் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தால் வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கதராணையத்தால், கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு உற்பத்தியின் பிரதான செலவின மதிப்பில் 30 விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியாக (MDA) கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதயா சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய 30 விழுக்காடு தொகையில், 40 விழுக்காடு தொகை நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கு ஊக்கக் கூலித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்தொகையானது மின்னணு தீர்வை முறையில் நேரடியாக தனிநபரின் வங்கிக் கணக்கிற்கு ஒவ்வொரு காலாண்டிலும்

அனுப்பப்படுகிறது. இவ்விவரங்கள் கதராணைக் குழுவின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மீதமுள்ள 60 விழுக்காடு, சர்வோதய சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவி விவரம் பின்வருமாறு: –

**(ரூ.இலட்சத்தில்)**

| **வருடம்** | **தொகை** |
|---|---|
| 2020–2021 | 151.34 |
| 2021–2022 | 163.80 |
| 2022–2023<br>(தணிக்கை செய்யப்படவில்லை) | 219.08 |

## 6.2. மாநில அரசு

தமிழ்நாடு அரசு, கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு கதர் இரகங்களின் உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் வணிக அபிவிருத்தி நிதியுதவியாக 20 விழுக்காடு எனக் கணக்கிட்டு வழங்குகிறது. 2022–2023–ஆம் நிதியாண்டில் மாநில அரசு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ.4 கோடியும், சர்வோதய

சங்கங்களுக்கு ரூ.22 கோடியும் நிதியுதவி வழங்கியுள்ளது.

## 7. கிராமத் தொழில்கள்

ஊரகப் பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் மனிதவளத்தைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் கிராமப்புற வறுமையைப் போக்க கிராமத் தொழில் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறைந்த மூலதன முதலீட்டில் அதிகளவிலான வேலைவாய்ப்பு என்பது கிராமத் தொழில் திட்டத்தின் தனிச்சிறப்பாகும். இவ்வாரியம், தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல் பொருட்கள் உற்பத்தி, சோப்பு உற்பத்தி, கைமுறைக் காகிதம் உற்பத்தி, மட்பாண்டங்கள் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு தொழில்களை ஊக்குவித்து வருகிறது.

வாரியம், கிராமத் தொழில்களை தொடர்ந்து மேம்படுத்தி, மாநிலம் முழுவதும் உள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சர்வோதய சங்கங்கள் மற்றும் பொது விநியோக அமைப்பின் சில்லறை

விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய ஊக்குவிக்கிறது.

## 7.1. சோப்புத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தொழில்களுள் முதன்மையான மற்றும் இலாபகரமான தொழில்களில் சோப்புத் தொழிலும் ஒன்றாகும். வாரியக் கட்டுப்பாட்டில் பின்வரும் மாவட்டங்களில் மொத்தம் 9 அலகுகள் இயங்கி வருகின்றன. இந்த சோப்பு அலகுகள் வாரியத்திற்கு பெரும் வருவாயை ஈட்டித் தருகிறது.

**சோப்பு அலகுகள்**

| வ. எண். | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் |
| 2. | | மாமண்டூர் |
| 3. | திருச்சிராப்பள்ளி | சமயபுரம் |
| 4. | தஞ்சாவூர் | நாஞ்சிக்கோட்டை |
| 5. | ஈரோடு | மொடக்குறிச்சி |
| 6. | சிவகங்கை | கண்டனூர் |
| 7. | கன்னியாகுமரி | மயிலாடி |
| 8. | திருவள்ளூர் | பூண்டி |
| 9. | கடலூர் | பண்ருட்டி |

குமரி, மூலிகா, நித்தம், வேம்பு, சந்தனம் மற்றும் கார்பாலிக் போன்ற சோப்பு வகைகள் குளியல் சோப்பு அலகுகளில் தயாரிக்கப்படுகின்றன. கிளீனிங் பவுடர், சலவை சோப்புக் கட்டி, சலவைத் தூள் மற்றும் பார் சோப்பு ஆகியவை இதர சோப்பு அலகுகளில் 'கோபுரம்' எனும் வணிக குறியீட்டில் தயாரிக்கப்படுகிறது.

ரோஸ், லாவெண்டர், செஞ்சந்தனம் மற்றும் சந்தனம் ஆகிய 4 நறுமணங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "காதி ப்ராக்ரென்ஸ்" சோப்புகள், இதுவரை ரூ.82.16 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தரமான சோப்புகள், நியாயமான விலையில் உற்பத்தி செய்யப்படுவதால், பொதுமக்கள் இவற்றை விரும்பி வாங்குகின்றனர். இவ்வாரியத்தால், சமீபகாலமாக கதர் கிராமத் தொழில் பொருட்கள் இணைய வழி விற்பனையை துவக்கி செயல்படுத்தி வருகிறது. மேலும், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து பிரதான பல்பொருள் அங்காடிகள் மூலமாக வாரியத்தின் பொருட்களை விற்பனை செய்ய மொத்த வணிகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர் வளாகத்தில் இவ்வாரியத்தால் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திரவ சலவை சோப்பு தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாரியம், புதிய இரக கிளிசரின் சோப்பை அறிமுகப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



**திரவ சலவை சோப்பு அலகு, கண்டனூர், சிவகங்கை மாவட்டம்**

இவ்வாரியம், செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் சோப்பு அலகில் தானியங்கி முத்திரை பதிக்கும் இயந்திரத்தை கொள்முதல் செய்து நிறுவியுள்ளதோடு, ஈரோடு மாவட்டம்

மொடக்குறிச்சி சோப்பு அலகில் மற்றொரு இயந்திரத்தை கொள்முதல் செய்து நிறுவவுள்ளது. இந்த இயந்திரங்களை நிறுவுவதன் மூலம், சோப்பு தயாரிப்புகளின் வடிவம் மேம்படும்.



**சோப்பு அலகு, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம்**

2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.1546.79 இலட்சம் மதிப்பிலான சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 8. தச்சு மற்றும் கருமாரத் தொழில்

கிராமப்புற கைவினைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை வழங்கும் பழமையான கிராமத் தொழில்களில் தச்சு மற்றும் கருமார தொழிலும் ஒன்றாகும். தற்போது, ஐந்து தச்சு மற்றும் கருமார அலகுகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன: –

| வ. எண் | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | வீரராகவபுரம் |
| 2. | இராணிப்பேட்டை | அரக்கோணம் |
| 3. | வேலூர் | பள்ளிகொண்டா |
| 4. | சிவகங்கை | கண்டனூர் |
| 5. | திருநெல்வேலி | பேட்டை |

இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்படும் மரம் மற்றும் இரும்பிலான அறைகலன்கள் அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக்கழகங்கள், இந்து சமய அறநிலையத் துறை, பொது நூலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது, திருநெல்வேலி மாவட்டம் பேட்டை அலகில் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக நவீன ஸ்டீல் தகடு வெட்டும் மற்றும் வளைக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.




**தச்சு மற்றும் கருமார அலகு, பேட்டை,**
**திருநெல்வேலி மாவட்டம்**

2022-2023-ஆம் நிதியாண்டில், ரூ.470.00 இலட்சம் மதிப்பிலான மரம் மற்றும் இரும்பிலான தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 9. காலணித் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் 8 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகிறது.

| வ. எண் | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | அம்பத்தூர் |
| 2 | சேலம் | சேலம் |
| 3 | திருப்பூர் | திருப்பூர் |
| 4 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 5 | சிவகங்கை | கண்டனூர் |
| 6 | நாமக்கல் | நாமக்கல் |
| 7 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 8 | கன்னியாகுமரி | நாகர்கோவில் |

அரசுத்துறைகளுக்கான கோப்புப் பெட்டிகள், அரசு மருத்துவமனைகளுக்கான இரப்பர்–தேங்காய் நார் மெத்தைகள், காலணிகள், நடத்துனர் பணப்பைகள், கையுறைகள், உள்ளாட்சி ஊழியர்களுக்கான காலணிகள் ஆகியவை இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.




**காலணி உற்பத்தி அலகு, குகை, சேலம்**

தோல் பொருட்களின் தரம் மற்றும் வடிவினை மேம்படுத்த சேலம், நாமக்கல் மற்றும் கண்டனூரில் (சிவகங்கை மாவட்டம்) மூன்று பஃபிங் மற்றும் பாலிஷ் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாரியம், 2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.115.89 இலட்சம் மதிப்புள்ள தோல் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்துள்ளது.

## 10. தேனீ வளர்ப்புத் தொழில்

### 10.1. காதி தேன்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஊக்குவிக்கப்படும் முக்கிய கிராமத் தொழில்களில் தேனீ வளர்ப்புத் தொழிலும் ஒன்றாகும். வாரியம், தற்போது நேரடியாக தேனீ விவசாயிகளிடம் இருந்து பச்சைத் தேனை கொள்முதல் செய்து கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்திலுள்ள தேன் பதப்படுத்தும் அலகில் பதப்படுத்தி தரம் பரிசோதித்து அக்மார்க் சான்றிதழுடன் காதி கிராப்ட் விற்பனை நிலையங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள் மூலம் விற்பனை செய்கிறது. இதன் மூலம் சுமார் 10,000 தேனீ விவசாயிகள் பயனடைகின்றனர்.

இவ்வாரியத்தால், அத்திப்பழம், பேரீச்சம்பழம், நெல்லி, வால்நட் மற்றும் உலர் பழங்கள் போன்ற ஆரோக்கியமான பொருட்களுடன் மதிப்பு கூட்டப்பட்ட தேன் 400 கிராம் முதல் 450 கிராம் அளவுகளில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.155.69 இலட்சம் மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 10.2. தேன் பரிசோதனைக் கூடம்

வாரியம், மார்த்தாண்டத்திலுள்ள அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் அதிக அளவுத் தேனை பரிசோதனை செய்யும் பொருட்டு நவீன தேன் பரிசோதனைக் கூடத்தை நிறுவியுள்ளது, தரமான பச்சைத் தேனை கொள்முதல் செய்து சந்தையில் நிலவும் தரநிலையை எட்ட இப்பரிசோதனைக் கூடம் வாரியத்திற்கு உதவியாக இருக்கும்.



**தேன் பரிசோதனைக் கூடம், மார்த்தாண்டம்**

## 11. கைமுறைக் காகிதத் தொழில்

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் செய்யப்பட்ட காகிதத் தயாரிப்புகளான கச்சா அட்டை, கோப்பு அட்டைகள், பாண்டு பேப்பர், அலுவலக கவர், எக்ஸ்ரே கவர், அட்டை பெட்டிகள் மற்றும் எழுதும் காகிதம் ஆகியவை கீழ்காணும் அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | பிடாகம் |
| 2 | கடலூர் | வடலூர் |
| 3 | திருப்பூர் | திருப்பூர் |
| 4 | ஈரோடு | செண்பகப்புதூர் |

2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.82.01 இலட்சம் மதிப்பிலான கைமுறைக் காகிதப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 12. இதர கிராமத் தொழில்கள்

இவ்வாரியம், பூஜை பொருட்கள், வலி நிவாரண தைலம், ஷாம்பு, மரச்செக்கு எண்ணெய் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்வதுடன், பாரம்பரிய அரிசி மற்றும் சிறு தானியங்களை சந்தைப்படுத்துகிறது. இதன் விவரங்கள் பின்வருமாறு: –

| வ. எண் | பொருட்களின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை | நிறுவப்பட்ட ஆண்டு | 2022-2023-இல் உற்பத்தி (ரூ.இலட்சத்தில்) | 2022-2023-இல் விற்பனை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | அகர்பத்தி, ஜவ்வாது பவுடர், மூலிகை பற்பொடி, ரோஸ் வாட்டர் மற்றும் பல | 1 | 2013 | 88.10 | 92.73 |
| 2 | நீலகிரி தைலம் | 1 | 2022 | 11.30 | 12.14 |
| 3 | ஷாம்பு, கை கழுவும் திரவம், குளியல் திரவம் மற்றும் திரவ சலவை சோப்பு | 1 | 2022 | 14.20 | 15.35 |
| 4 | மரச்செக்கு எண்ணெய் | 4 | 2022 | 59.05 | 69.10 |
| 5. | பாரம்பரிய அரிசி வகைகள் | 4 | 2022 | 13.05 | 15.17 |
| 6. | சிறு தானியங்கள் | 4 | 2022 | 1.10 | 1.25 |
| மொத்தம் | | | | 186.80 * | 205.74 * |

* தணிக்கை செய்யப்படவில்லை

## 13. வணிகம்

### 13.1. கதர் அங்காடிகள்

வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் கிராமப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தமிழ்நாடு முழுவதும் "காதி கிராப்ட்" என்ற பெயரில் 47 விற்பனை அங்காடிகளை வாரியம் நடத்தி வருகிறது.

## 13.2. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பு சேர்க்கும் கிராமப் பொருட்களின் விற்பனை (ODOP)

இத்திட்டத்தின் மூலம் அந்தந்த மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கும் பொருட்களான கிராமத் தொழில் பொருட்கள், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் மகளிர் சுயஉதவி குழுக்கள் (SHGs), பஞ்சாயத்து அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்பு (PLFs), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் பயனாளிகள் (PMEGP) மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து சந்தைப்படுத்தப்படுகிறது.

முக்கிய படிநிலைகள்:

(i) சிறப்பு மற்றும் தனித்துவமான கிராமத் தயாரிப்புகளை அடையாளம் காணுதல்.

(ii) கொள்முதல், பேக்கிங், விளம்பரம், வணிகம் மற்றும் சந்தைப்படுத்துவதற்கு உதவுதல்.

(iii) சந்தையில் போட்டியிடும் வகையில் பொருட்களின் விலையை நிர்ணயித்தல்.

(iv) கதரங்காடிகள், சர்வோதய சங்கங்கள், தனியார் சிறப்பு அங்காடிகள் மூலம் சந்தைப்படுத்தல்.

வாரியத்தால், 05.02.2023 அன்று அனைத்து கதரங்காடிகள் மற்றும் சர்வோதய சங்கங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை ரூ.51.20 இலட்சம் மதிப்பிலான கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 13.3. இணைய வழி விற்பனை

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் இணையதள விற்பனையை அதிகரிக்க கதர் கிராமத் தொழில் வாரியத்தால் www.tnkvib.org மற்றும் www.tnkhadi.com ஆகிய இரண்டு இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, குறிப்பாக இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் ஆண்ட்ராய்டு மற்றும் iOS வழியில் செயல்படும் "tnkhadi" எனும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமேசான் (Amazon), பிளிப்கார்ட் (Flipkart) போன்ற பல்வேறு மின் வணிகத் (e–Commerce) தளங்கள் வாயிலாகவும் கதர் கிராமப்

பொருட்கள் மற்றும் பனைப் பொருட்கள் இணைய வழி மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.5.27 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**13.4. தனி உரிமைக் கிளைகள் (Franchise)**

கதரங்காடி இல்லாத பகுதியிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்கள் கிடைக்கும் வகையில் தனி உரிமைக் கிளைகள் அமைக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது செயல்படும் தனி உரிமை கிளைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | திருப்பெரும்புதூர் |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | கன்னியாகுமரி | சுசீந்திரம் |
| 4. | திருச்சிராப்பள்ளி | திருவெறும்பூர் |
| 5. | திருநெல்வேலி | திருநெல்வேலி |

2022–2023–ஆம் நிதியாண்டில் தனியுரிமை கிளைகளின் மூலம் ரூ.8.75 இலட்சத்திற்கு விற்பனை எய்தப்பட்டுள்ளது.

## 13.5. கண்காட்சி மற்றும் விற்பனை

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு அரசு அலுவலக வளாகம் மற்றும் கல்லூரிகளில் விற்பனை மற்றும் கண்காட்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. சென்னை குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற கொலு கண்காட்சியில் மண்பாண்டப் பொருட்களுக்கு என பிரத்தியேகமாக 9 அரங்குகளுடன் 35 அரங்குகள் அமைத்து கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியை நடத்தியதன் மூலம் ரூ.104.40 இலட்சம் மதிப்பிலான கதர் கிராமப் பொருட்கள், பொம்மைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

காந்தி ஜெயந்தி தினமான 02.10.2022 அன்று, AMET பல்கலைக்கழகத்தின் 4000 மாணவர்கள்,

ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களால் "கை கொடுப்போம் காதிக்கும் கைத்தறிக்கும் காந்தி பிறந்த நாளில்" என்ற புதிய முயற்சியின் கீழ் ரூ.44.00 இலட்சம் மதிப்புள்ள கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

## 13.6. விளம்பரங்கள்

கதர் கிராமத் தொழில் வாரியமும், பனை வாரியமும் தரமான பொருட்களைத் தயாரித்தாலும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முறையான விளம்பரங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால், ஆதிரை பட்டு, காதி ப்ராக்ரென்ஸ் சோப்புகள், காதி தேன், பதநீர், பனை வெல்லம் மற்றும் சுக்கு காபி தூள் பற்றிய குறும் விளம்பரப் படங்கள் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்பட்டும், திரையரங்குகள் மற்றும் அரசு எல்.இ.டி வாகனங்களில் திரையிடப்பட்டும் வருகிறது.




**அரசு பேருந்துகளில் விளம்பரம்**

பாரம்பரிய அரிசி, மரச்செக்கு எண்ணெய், பனைப் பொருட்கள் மற்றும் பனை ஓலைப் பொருட்களை பிரபலப்படுத்த 4 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வலையொளி (YouTube), இன்ஸ்டாகிராம் (Instagram), ட்விட்டர் (Twitter) மற்றும் முகநூல் (Facebook) போன்ற சமூக ஊடகங்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றது.

## 14. தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ், 165 தொழிற் கூட்டுறவு

சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதனில், 34 மண்பாண்ட தொழிற் கூட்டுறவு சங்கங்களும் அடங்கும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயற்பதிவாளராகச் செயல்படுகிறார். இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் மற்றும் செலவுகள் கூட்டுறவு தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.2991.10 இலட்சத்திற்கு இச்சங்கங்களால் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 15. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறையின் "பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்” 2008–2009–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொழில் மற்றும் வணிகத்

துறை, கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் மற்றும் கயிறு வாரியம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 01.07.2016 முதல் இணைய வழியாக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், வங்கிகளால், உற்பத்தி பணியில் ஈடுபடும் பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக ரூபாய் 50 இலட்சமும், சேவைப் பிரிவில் ஈடுபடும் பயனாளிகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் 20 இலட்சமும் வழங்கப்படுகிறது. உற்பத்திப் பிரிவின் கீழ் ரூ.10 இலட்சத்துக்கு மேல் கடன் பெறுவதற்கும், சேவைப் பிரிவின் கீழ் ரூ.5 இலட்சத்துக்கு மேல் கடன் பெறுவதற்கும் பயனாளிகள் குறைந்தபட்சம் 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் 2020–2021 முதல் 2022–2023 வரை விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | அலகுகளின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை (ரூ.இலட்சத்தில்) | வேலைவாய்ப்பு வழங்கியது (பயனாளிகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 2020–2021 | 792 | 1,829.75 | 5,489 |
| 2021–2022 | 1085 | 2,601.26 | 8,680 |
| 2022–2023 * | 952 | 2,668.95 | 7,616 |

*இறுதி செய்யப்படவில்லை




## 16. கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை


தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் 2021–2022 மற்றும் 2022–2023–ல் ஒட்டுமொத்தமாக கதர் கிராமப் பொருட்களின்

உற்பத்தி மற்றும் விற்பனையின் சாதனை விவரம் பின்வருமாறு:–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | தொழில் | 2021–2022(தணிக்கைக்கு பின்பு) | | 2022–2023 (தணிக்கை செய்யப்பட வேண்டும்) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | **கதர்** | 682.58 | 2137.25 | 1217.31 | 1843.49 |
| 2. | **கிராமத் தொழில்கள்** | | | | |
| | அ. சோப்பு | 1265.70 | 1234.41 | 1404.71 | 1546.79 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரம் | 746.12 | 815.04 | 465.00 | 470.00 |
| | இ. தோல் பொருட்கள் | 66.55 | 55.55 | 101.44 | 115.89 |
| | ஈ. கை முறைக் காகிதம் | 49.83 | 34.07 | 49.22 | 82.01 |
| | உ. தேனீ வளர்ப்பு | 105.35 | 133.11 | 116.96 | 155.69 |
| | ஊ. இதர தொழில்கள் | 50.62 | 296.93 | 186.80 | 601.45* |
| | எ. ஒரு மாவட்டம் ஒரு பொருள் | – | – | – | 51.20 |
| 3. | **தொழிற் கூட்டுறவு சங்கங்கள்** | 1518.83 | 2084.32 | 2032.96 | 2991.10 |
| | **கூடுதல்** | **4485.58** | **6790.68** | **5574.40** | **7857.62** |

* கண்காட்சி வழி விற்பனை மற்றும் கழிவுப் பொருள் விற்பனை ஆகியவற்றின் மூலம் ஈட்டப்பட்ட தொகையும் இதில் அடங்கும்




## 17. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், கதர் இரகங்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவி வழங்கவும் தேவையான நிதியுதவியை மாநில அரசு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கி வருகிறது.

அரசால், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றிற்கு, 2023–2024–ஆம் ஆண்டு வரவு

செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு: –

| வ. எண் | விவரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான மானியம். | | 9837.76 |
| 2. | தள்ளுபடி மானியம் | கதர் வாரியத்திற்கு | 400.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு | 2200.00 |
| 3. | தணிக்கைக் கட்டணம் | | 163.38 |
| 4. | கிராமத் தொழில் மேம்பாட்டிற்கான உதவி | | 0.01 |
| 5 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 6. | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| 7. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை | | 584.35 |
| 8. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு 'சீலா' மின்விசைச் சக்கரங்கள் வழங்குதல் | | 0.01 |
| 9. | விளம்பரமும் பிரச்சாரமும் | | 10.00 |
| | மொத்தம் | | 13195.53 |

## தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், 1994 தமிழ்நாடு சட்டம் 15–இன் கீழ் பனைத் தொழில் தொடர்பான திட்டங்களை செயல்படுத்த உருவாக்கப்பட்டது. இந்த வாரியத்தின் கட்டுப்பாட்டில், 720 தொடக்க பனை வெல்லம் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட அளவில் 8 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

### 1. நோக்கங்கள்

பனைத் தொழிலாளர்களுக்கு நிதியுதவியுடன், தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதுடன், பனைத் தொழிலாளர்களின் வருவாயை அதிகரிக்க அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பனைப் பொருட்களை சந்தைப்படுத்துவதும் இவ்வாரியத்தின் நோக்கமாகும்.

## 2. நிருவாகம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் தலைவர் ஆவார். அலுவல் சார் உறுப்பினர்களின் விவரம்:–

1. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.
2. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.
3. கூடுதல் காவல்துறை இயக்குனர், (மதுவிலக்கு மற்றும் கலால்).
4. அரசு இணை இயக்குநர், நிதி (BPE) துறை.
5. தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்), தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அனைத்து தொடக்க பனை வெல்லம்

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவற்றிற்கு செயற்பதிவாளர் ஆவார்.

## 3. பதநீர் இறக்குவதற்கான உரிமம்

பதநீரை, கள் போன்ற இதர போதைப்பொருளாக மாற்றி பயன்படுத்துவதை தடுக்கும் வகையில், முறையான உரிமத்துடன் மட்டுமே பதநீரை இறக்கி விற்பனை செய்ய வேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த ஆணையின் படி, பதநீரை இறக்குவதற்கான உரிமம் ஒவ்வொரு நிதியாண்டிலும் புதுப்பிக்கப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் 2927 பனைத் தொழிலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட கதர் கிராமத் தொழில்களின் உதவி இயக்குநர்களால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

## 4. பதநீர் (நீரா)

பனை வெல்லம் (கருப்பட்டி), பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை, பனை மிட்டாய் போன்ற

உண்ணக்கூடிய பனைப் பொருட்களின் தொடர் உற்பத்திக்கு பதநீர் ஒரு முக்கிய மூலப்பொருளாகும். பதநீர் ஓர் இயற்கை பானமாகும்.

பனை வாரியம், 2022–2023–ஆம் நிதியாண்டில் பதநீர் இறக்குபவர்களிடமிருந்து 1.42 இலட்சம் லிட்டர் பதநீரைக் கொள்முதல் செய்து ரூ.104.80 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

**5. பொது விநியோகக் கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை**

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் "கற்பகம்" என்ற பெயரில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தால் பொது விநியோகத் திட்டக் கடைகளுக்கு பனை வெல்லம் விநியோகிக்கப்படுகிறது. இதுவரை ரூ.490.19 இலட்சம் மதிப்பிலான 124.10 மெட்ரிக் டன் பனை வெல்லம் விநியோகிக்கப்பட்டுள்ளது. பல்பொருள் அங்காடிகளில் "கரும் பனை" என்ற பெயரில் பனை வெல்லம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கற்பகம்




கரும்பனை




## 6. பனை ஓலைப் பொருட்கள்

பனை வாரியத்தின் கீழ் செயல்படும் கூட்டுறவு சங்கங்களில் பனை ஓலை பொருட்களான விசிறிகள், மிதியடிகள், கூடைகள், பரிசுப் பொருட்களுக்கான பெட்டிகள், நகைப் பெட்டிகள், பேனா ஸ்டாண்டுகள், சாவி கொத்துகள், மாலைகள், விளையாட்டு பொம்மைகள் மற்றும் பனந்தும்பு தூரிகைகள் போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 2023–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தரமான பனை ஓலை பொருட்களை தயாரிக்கும் பயிற்சி திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மற்றும் திருச்செந்தூரில் 100 பெண்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 7. சந்தைப்படுத்துதல்

உண்ணும் பனைப் பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனை மிட்டாய், பனம்பழச்சாறு, சுக்கு காபிதூள் மற்றும் உண்ணாப் பனைப் பொருட்களான பனை ஓலைப் பொருட்கள், தூரிகைகள் போன்றவை கதரங்காடிகள், பனைப் பொருள் விற்பனை அங்காடிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



**பனைப் பொருட்கள்**

**பனங்கற்கண்டு** **சுக்கு காபித் தூள்**






சென்னை குறளகம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, சிவகங்கை ஆட்சியர் அலுவலக வளாகம், திருவில்லிப்புத்தூர் பேருந்து நிலையம், நெய்வேலி நகரம் மற்றும் இராமநாதபுரத்திலுள்ள டாக்டர்.ஏ.பி.ஜே அப்துல் கலாம் நினைவிடம் ஆகிய இடங்களில் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சமீபத்தில், பனை பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்கண்ட 10 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் பனைப் பொருள் விற்பனை அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன.

| வ. எண் | மாவட்டம் |
|---|---|
| 1. | இராணிப்பேட்டை |
| 2. | வேலூர் |
| 3. | திருவண்ணாமலை |
| 4. | விழுப்புரம் |
| 5. | பெரம்பலூர் |
| 6. | தஞ்சாவூர் |
| 7. | புதுக்கோட்டை |
| 8. | நாகப்பட்டினம் |
| 9. | தூத்துக்குடி |
| 10. | தேனி |

## 8. பொது வசதி மையம்

சுத்தமான பனை வெல்லம் தயாரிப்பது சவாலான பணியாகும். இச்சிரமங்களை போக்க, தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் பொது வசதி மையம் (CFC) நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தில் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப்புறச் சூழலில், கொதி நீராவி முறையில் பனை வெல்லம் தயாரிக்கப்படவுள்ளது. வெப்பநிலையை கட்டுப்படுத்தும் முறையின் மூலம், பனை வெல்லம் கருகுவதைத் தவிர்ப்பதோடு, தூசி மற்றும் சுத்தமற்றப்

பொருட்கள் இல்லாத தரமான வெல்லம் தயாரிக்க முடியும்.





**பொது வசதி மையம், காயல்பட்டினம்,**
**தூத்துக்குடி மாவட்டம்**

## 9. கட்டடம் கட்டுதல் மற்றும் புனரமைத்தல்

மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையம் கடலூரில் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் பனை வெல்லத்தைச் சேமிக்க ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டம் மானாமதுரையிலுள்ள பனைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி மையம் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாநில இணையத்தின், செங்கல்பட்டு மாவட்டம் கடப்பாக்கத்திலுள்ள கட்டடத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 10. பனை வெல்லம் தயாரிப்புக்கான பயிற்சி

தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்காக ஐந்து குழுக்களுக்கு (50/குழு) ரூ.50.00 இலட்சம் செலவில் 250 நபர்களுக்கு பனைவெல்லம் உற்பத்திக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மாவட்டம் | அலகு இருப்பிடம் |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | சாயல்குடி |
| 2. | தூத்துக்குடி | வீரபாண்டியபட்டினம் |
| 3. | கடலூர் | கடலூர் |
| 4. | திண்டுக்கல் | கோவிலூர் |
| 5. | ஈரோடு | சிறுவலூர் |

இத்திட்டத்திற்கான நிதி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 11. பனை விதைகள் விநியோகம்

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திட, ரூ.30.00 இலட்சம் மதிப்பிலான 10 இலட்சம் பனை விதைகள், மாவட்ட பனை வெல்ல இணையத்தால் சேகரிக்கப்பட்டு, ஆர்வமுள்ள பனை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக தோட்டக்கலை துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

## 12. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை


கடந்த 3 ஆண்டுகளின் பனைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் பின்வருமாறு:

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | வருடம் | ஆரம்ப இருப்பு | உற்பத்தி | மொத்தம் | விற்பனை | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2020-2021 | 1088.21 | 1511.03 | 2599.24 | 1623.49 | 975.75 |
| 2. | 2021-2022 | 975.75 | 1381.18 | 2356.93 | 1505.93 | 851.00 |
| 3. | 2022-2023* | 851.00 | 1817.70 | 2668.70 | 2084.35 | 584.35 |

* தணிக்கை செய்யப்படவில்லை.

(ரூ. இலட்சத்தில்)




**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.